www.padippakam.com

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு

# செம்பதாகை

இதழ் 11
ஒக்றோபர் 2011

## இலங்கையின் தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமையும்

*(கட்சியின் 5வது அனைத்து இலங்கை மாநாட்டின் முதலாவது நிறை பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றி ஏற்கப்பட்ட ஆவணம்)*

## சிவில் சமூகமும் என்.ஜி.ஓ. சமூகமும்

*திருமுகன்*

## ஊதியம் பெறுகிறவராகப் “பெண் எனும் ஆள்

*க்யேர்ஸ்ற்றி எரிக்ஸன்*

## பேராசிரியர் கைலாசபதியைப் பின்நவீனத்துவப் பார்வைக்குட் தள்ளிவிடும் முயற்சி

*ஜெ.சற்குருநாதன்*

## கவிதைகள்:

*கிருஷ்ணபிரியன், செல்வகுமார், பில்கிஸ் ZrFிருல் ஹஸன்*

படிப்பகம்

**ஆசிரியர் தலையங்கம்**

# ஒரு பயணத்தின் கதை

அமெரிக்காவுக்கு வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அமெரிக்கச் சனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையிலிருந்து அழைப்பு வந்ததாக நமக்குச் சொல்லப்பட்டது. பின்பு அமெரிக்க அரசுத் திணைக்களத்திலிருந்து அழைப்பு வந்ததாகச் சொல்லப்பட்டது. இரா. சம்பந்தனைத் தலைவராகக் கொண்ட நால்வர் குழு ஒக்றோபர் 25ம் திகதி விமானமேறியது. இது நல்ல வாய்ப்பு எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் ஆரவாரித்தன. புலிகளின் தோல்வியையடுத்து மகிந்த சிந்தனை ஆட்சியின் பேரினவாதச் செய்நிரல் துரிதமாக முன்னெடுக்கப்படும் ஒரு சூழலிற், கூட்டமைப்பின் அரசியல் இயலாமையின் அரசியலாகவே இருந்துவருகிறது. வடக்கு-கிழக்கில் வாக்குக்கள் பெறும் அலுவலைத் தவிர வேறெதையுமே கவனியாத கூட்டமைப்பு, இந்திய அழுத்தத்தின் கீழ் அரசாங்கத்துடன் பதினொரு முறை பேசியும் அரசாங்கத் தரப்பிலிருந்து எதையுமே வெல்லத் தவறிவிட்டது. இந் நிலையில் அமெரிக்காவின் ‘அழைப்பு’ நீரில் மூழ்குகிறவனின் கைக்கு எட்டிய ஒரு கயிறாகத் தெரிந்தது.

அந்த அழைப்புப் பற்றி ஐயங்கள் சில இப்போது எழுந்துள்ளன. கூட்டமைப்பினருக்கான அமெரிக்க அரசுத் திணைக்கள அழைப்பு எழுத்தில் வந்ததா? வந்திருப்பின், அதையிட்டுக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரிடம் இலங்கை அரசாங்கம் ஒரு விளக்கத்தைக் கேட்டுப் பெற்றிருக்கும். அப்படி நடந்ததற்கு ஒரு ஆதாரமுமில்லை. வேறு வகையில் அழைப்பு வந்திருந்தால், எவர் எந்த அடிப்படையில் அழைத்தார் என்று தமிழ் மக்களுக்கு ஆதாரங்களுடன் கூறுவதற்குக் கூட்டமைப்பினருக்கு ஒரு கடப்பாடுண்டு. நமக்குப் பலருங் கூறியதற்கு மாறாகக், கூட்டமைப்பினருடன் அரசுத் திணைக்கள அலுவலர்களின் சந்திப்புக்கு அரசியல் முக்கியத்துவம் எதுவும் இல்லையெனவும் அமெரிக்க அரசுத் திணைக்களத்தினரைச் சந்திக்க எவருக்கும் உள்ள உரிமையையே கூட்டமைப்பினர் பயன்படுத்தியதாகவும் அமெரிக்க அரசுத் திணைக்களம் கூறியது.

சந்திப்பிற்குப் பின்பு, கூட்டறிக்கையோ அதிகாரபூர்வமான அல்லது தனிப்பட்ட முறையிலான படம் எதுவும் எடுக்கப்படவில்லை. அமெரிக்க அரசுச் செயலாளர் திருமதி கிளின்ற்றனைச் சந்திப்பார்களெனவும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூனைச் சந்திப்பார்களெனவும் அவர்கள் புறப்படு முன் நமக்குச் சொன்னவர்கள், எந்த அடிப்படையில் அப்படிச் சொன்னார்களென்று நமக்கு இதுவரை சொல்லப்படவில்லை.

போய்வந்த பின்பு அழைப்பைப் பற்றியும் அங்கு பேசித் தீர்த்தவை பற்றியும் அமர்க்களப்படுத்த முன், அந்த அழைப்பு மடலின் பிரதியை, எல்லாத் தமிழ் மக்களும் இல்லாவிட்டாலும், தங்கள் ஆதரவாளர்களாவது கண்டு மகிழ ஊடகங்கள் மூலம் வழி செய்வார்களா?

அமெரிக்க 'அழைப்பும்' பயணமும் அரசியற் பெறுமானமற்றவை என இப்போது தெளிவாகிவிட்டாலும் சிங்களப் பேரினவாதிகள் அதில் ஒரு விதமான ஆதாயம் தேடுகின்றனர். கூட்டமைப்பினர் இன்னொரு விதமான ஆதாயம் தேடுகின்றனர். ஆனால், தமிழரசுக் கட்சியும் பின்பு தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும் இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எப்போதும் செய்துவந்துள்ளது போல, அழைப்பையும் சந்திப்பின் விளைவுகளையும் பற்றிய தகவல்கள் என்றென்றும் மூடுமந்திரமாகவே வைக்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

அமெரிக்கா உண்மையாகவே கூட்டமைப்பினருக்கு முக்கித்துவம் கொடுத்திருந்தாலும், தமிழ் மக்கள் அதையிட்டு மகிழவியலாது. கூட்டமைப்பினருக்குக் கிடைத்துவந்த இந்திய அழைப்புக்களைப் போல அமெரிக்க அழைப்பெதுவும் வருமாயின், அதன் உள்நோக்கங்கள் என்னவாக இருக்கலாம் எனத் தமிழ் மக்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும். அமெரிக்கா என்றுமே தமிழ் மக்களின் நண்பனோ இரட்சகனோ அல்ல. இந்தியாவிடம் முறையிட்டு முறையிட்டுக் களைத்த நிலையில் அமெரிக்காவுக்கு போய் வந்ததன் மூலம் தமிழ் மக்களை மேலுஞ் சில காலம் ஏமாற்றக் கூட்டமைப்பினருக்கு ஒரு வாய்ப்பக் கிட்டியுள்ளது. அமெரிக்காவுக்குப் புலம் பெயர்ந்த மேட்டுக் குடிகள் அதற்கு உதவியுள்ளனர். அது தான் இப் பணயத்தின் கதை.

தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில், தம்மை மக்கள் நம்பினாலும் நம்பாவிட்டாலும், கூட்டமைப்பினருக்குச் சில கடமைகள் உள்ளன: இன்னமும் முகாங்களில் வாழ்வோரின் நிலை, மீளக் குடியமர்த்தப்பட்டோரின் நிலை, இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளின் பாதிப்பு, தமிழ் மீனவரின் மீன்பிடிப்பு உரிமை மறுப்பு, சம்பூர் நிலப்பறிப்பால் பாதிக்கப்பட்டேரின் நிலை, முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியேறுவதற்கான உரிமை மறுப்பு என்பன போன்று மக்கள் பிரச்சனைகள் பல அவர்களின் கவனிப்பை வேண்டி அலறுகின்றன. கவனிப்பார்களா?

பாதிக்கப்பட்ட மக்களிடம் அவர்களுடைய நிலைமைகளைக் கேட்டறிய மனம் வராதவர்களுக்கு அம் மக்கள் சார்பாக எவருடனும் பேசுவதற்கு என்ன விதமான தார்மிக உரிமை உண்டு என்பதைத் தமிழ் மக்கள் அவர்களிடம் உரக்கக் கேட்க வேண்டும்.

*****

www.padippakam.com

# இலங்கையின் தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமையும்

*(23.07.2011 அன்று கொழும்பில் நடந்த புதிய–ஜனநாயக மாக்சிச–லெனினிசக் கட்சியின் 5வது அனைத்து இலங்கை மாநாட்டின் முதலாவது நிறை பேரவைக் கூட்டத்தில் இலங்கையின் தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமையும் பற்றி நிறைவேற்றப்பட்ட அறிக்கையும் தீர்வுத் திட்டமும்)*

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது சமகால சூழ்நிலையில் ஒரே நாட்டிற்குள் சுயநிர்ணய உரிமை-சமத்துவம்-சுயாட்சி என்ற அடிப்படையில் அமைய வேண்டும் என்பதை எமது கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இந்தக் கருத்தைக் கோட்பாட்டு ரீதியிலும், நடைமுறை ரீதியிலும் நிலைநிறுத்துவதில் நாம் தொடர்ந்து போராடி வருகிறோம். இது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பேரினவாதத்திற்கு எதிரான பெருந்தேசியவாதம், குறுந்தேசியவாதம் என்பவற்றுக்கும் மாறான பாட்டாளி வர்க்க நிலைப்பாடென எமது கட்சி நம்புகிறது.

சிங்கள-பௌத்த தேசியவாதிகளும் பேரின அடக்குமுறை யாளர்களும் சுயநிர்ணய உரிமை, சமத்துவம், சுயாட்சி என்ற சொற்களைக் கேட்கவே விரும்பாதவர்களாக (அச்சமடைபவர்களாக, ஆத்திரமடைபவர்களாக) சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தை விடாப் பிடியாகக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். இதுவே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். இந்த நிலைப் பாட்டை ஏற்கிறார்களோ இல்லையோ பேரினவாத ஆதிக்கத்தின் விடாப்பிடித்தனத்தை ஏற்றுக்கொண்டு அதனிடமிருந்து அபிவிருத்தி என்ற பேரிலான சலுகைகளைப் பெற்றுக் கொண்டு தமது இருப்பை பாதுகாப்பதில் சீரழிந்து போயுள்ள சில முன்னாள் தமிழ்த் தேசிய வாதிகள் (முன்னர் தனித் தமிழீழத்திற்காக ஆயுதமேந்தியிருந்தவர்கள்) அக்கறையாக இருந்து வருவதுடன் அதனை ஒரு கருத்தியலாகத் தமிழ் மக்களிடம் நிலைநாட்டப் பிரயத்தனம் செய்து வருகின்றனர்.



படிப்பகம்

சுயநிர்ணய உரிமை, சமத்துவம், சுயாட்சி என்பவை நாட்டுப் பிரிவினையைத் தவிர, வேறெதுவுமில்லை என்றும் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு தனித் தமிழீழம் தான் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வரும் தமிழ் தேசியவாதிகள் இருக்கின்றனர். இதில் எஞ்சியிருக்கும் புலிகள் இயக்கத்தினரும், அந் நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்ட புலம்பெயர்ந்தவர்களும் அடங்குவர். இவர்களே "நாடு கடந்த தழிழீழ அரசு" என்பதை வற்புறுத்தி வருகின்றனர்.

தமது கருத்தை வெளிப்படையாக காட்ட முடியாத சூழ்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சுயநிர்ணய உரிமையை கைவிடோம் என்று கூறிக் கொண்டு, வட கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறி, ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கத்துடன் பேசி வருகின்றனர். இந்திய மேலாதிக்க வாதிகள் சொல்லும்போது பேசுவார்கள். அவர்கள் பேச்சுவார்த்தையை முறிக்கச் சொல்லும்போது முறிப்பார்கள்.

இதைவிடப், பிரிவினையை நிராகரித்து இன மேலாதிக்கமற்ற அதிகாரப் பகிர்வைக் கோருகின்ற சக்திகளும் தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் இருக்கின்றன. சமத்துவம் மட்டுமே போதும் என்கின்ற சக்திகளும் இருக்கின்றன.

இந்தப் பொதுவான போக்குகளுக்கு அப்பாலேயே புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் நிலைப்பாடு அமைந்துள்ளது.

சுயநிர்ணய உரிமை-சமத்துவம்-சுயாட்சியை உயர்த்திப் பிடிக்கும் அதேவேளை, ஏகாதிபத்தியத்திற்கும், இலங்கையின் ஆளும் வர்க்கங் களுக்குத் துணைபோகும் பேரினவாதத்தினைப் போஷித்துத் தொழி லாளர் வர்க்க ஐக்கியத்தைக் குலைக்கும் விதத்தில் அமையும் 'பிரி வினைவாதத்தினைக்' கட்சி நிராகரிக்கிறது. இது சுயநிர்ணய உரிமை என்பது 'பிரிவினைவாதமல்ல' என்ற அடிப்படையிலும், இலங்கையின் சமகாலச் சூழ்நிலையின் அடிப்படையிலும் கட்சி வகுத்திருக்கும் நிலைப்பாடாகும்.

எமது கட்சி தேசிய இனங்களுக்குக் குறைந்தபட்ச அதிகாரப் பரவல், அதிகாரப் பங்கீடு, சமத்துவம் போன்றவை சட்டரீதியாக உறுதி செய்யப்படுவதை நிராகரிக்கவில்லை. அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்க்கவில்லை. இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதைப் பெருந்தேசியவாதிகளும் பேரினவாதிகளும் அடிப் படைவாதிகளும் 'பிரிவினைவாதிகளும்' எதிர்த்தபோதும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதும் அவர்களை ஊக்குவிப்பதற்கான

www.padippakam.com

நடவடிக்கைகளில் கட்சி ஈடுபட்டதும் இல்லை. ஈடுபடப் போவது மில்லை. கட்சி அவற்றை வன்மையாகக் கண்டித்தே வந்துள்ளது. ஆனால் சுயநிர்ணய உரிமை, சமத்துவம், சுயாட்சி போன்றவற்றை மறுக்கும் இலக்குடனான பெயரளவிலான அதிகாரப்பரவல் அதிகாரப் பங்கீடு போன்றவற்றை நாம் தொடர்ந்தும் அம்பலப்படுத்துவோம். அதிகாரப் பங்கீடு குறைந்தபட்ச அரசியல் தீர்வாகவும் நீண்டகாலத்தில் சுயநிர்ணய உரிமை-சமத்துவம்-சுயாட்சியை வென்றெடுத்து நிலை நாட்டுவதற்கு வழி செய்வதாகவும் இருக்கும் பட்சத்தில் அவற்றை நிராகரிக்கும் நிலைப்பாட்டை எடுக்கும் அவசியம் நமக்கு இல்லை. ஆனால் அவற்றை இலங்கையின் ஆளும் வர்க்கங்கள் தாம்பாளத்தில் வைத்துத் தந்துவிடப் போவதில்லை.

தமிழ் மக்கள் மீதான தேசிய இன ஒடுக்குமுறை யுத்தமாக வளர்த் தெடுக்கப்பட்டு ஏறக்குறையத் தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான அனைத்துப் போராட்டங்களும் முறியடிக்கப்பட்டுத் தமிழ் மக்களும் வடக்கு-கிழக்குப் பிரதேசமும் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இராணுவ ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

யுத்தத்தினால் இடம்பெயர்க்கப்பட்ட மக்கள் இன்னும் அவர்களின் சொந்த இடங்களில் குடியேறமுடியாதிருக்கின்றனர். இடம்பெயர்ந்த நிலையிலேயே அதிகமானோர் வாழ்கின்றனர். தமிழ் மக்களின் வாழி டங்களும் சூழலும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகத் தொடர்வ தால் மீண்டும் அவர்களின் சொந்த இடங்களுக்கு சென்று குடியேற முடியாதவர்களாக இருக்கின்றனர். யுத்தத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை பெயர் விபரங்கள் போன்றன இன்னுமே சரியாக வெளியிடப்படவில்லை. யுத்தத்தைக் காரணமாகக் கொண்டு சந்தேகத் தின் பேரில் கைது செய்யப்பட்டு பல வருடங்களாக நீதி விசாரணை யின்றித் தடுத்து வைக்கப்பட்டவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. கணவனை இழந்த பெண்களின் எண்ணிக்கை உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படவில்லை. அதே போன்று பெற்றோரை இழந் திருக்கும் பிள்ளைகள் பற்றிய சரியான எண்ணிக்கை இன்னும் வெளி யிடப்படவில்லை. இவை பல பத்தாயிரங்களாக இருக்கும் என்றே நம்பப்படுகிறது. இவ்வாறு யுத்தத்தினால் பலவகையிலும் பாதிக்கப் பட்டவர்களுக்குப் புனர்வாழ்வும் புனரமைப்பும் வழங்கப்படவில்லை.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தனிப்பட்டவர்களின் நிலங்கள் இராணுவத்தினாலும், பல்தேசியக் கம்பனிகளாலும், பேரினவாதிகளா லும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. தனியார், அரச காணிகளில் இராணுவ முகாங்களும் பௌத்த விகாரைகளும் அமைக்கப்படுவ துடன் இராணுவக் குடியேற்றங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. இவை



படிப்பகம்

வடக்குக் கிழக்கு தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பதனை இல்லாமலாக்கி அப் பிரதேசங்களில் தமிழ் மக்களின் குடிப்பரம்பலைச் சிதைக்கும் தூரநோக்கில் முன்னெடுக்கப்படும் பேரினவாத மேலாதிக்க நடவடிக்கைகளாகும்.

வடக்குக் கிழக்கில் இயல்பு வாழ்வோ ஜனநாயகச் சூழ்நிலையோ இல்லை. ஆயுத அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் மக்களுக்கு எதிரான குற்றச் செயல்களும் கூடிய பிரதேசமாக இருப்பதுடன், வடக்கு-கிழக்கு இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. பொலிஸ் இராணுவச் சோதனைகள், கண்காணிப்புகள், கைதுகள், காணாமற்போதல்கள் அடக்குமுறை நிகழ்வுகளாகத் தொடர்கின்றன.

யுத்த அழிவுகளிலும் பாதிப்புகளிலும் இருந்து தமிழ் மக்களும் வடக்கு-கிழக்கு பிரதேசமும் மீட்கப்பட்டு மக்களுக்கு புனர்வாழ்வளிக்கப் பட்டு அப் பிரதேசங்கள் புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும். திட்டமிட்ட, இராணுவரீதியான குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும். இன்று அங்கு இடம்பெற்று வருபவை ஒருவகைக் கண்துடைப்பு நடவடிக்கை களும் நியாயமான அரசியல் தீர்வை மறுக்கும் வெறும் சலுகை வழங்கல்களாகவே மேற்கொள்ளப்படுகின்றன. இவை தீர்க்கப்பட வேண்டும் என்பது, இவ்வளவு அழிவுகளுக்கும் காரணமான தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற உடனடிப் பிரதான கோரிக்கைக்குச் சமமானதல்ல.

மாகாணங்களுக்குச் சிறிதளவு அதிகாரப் பரவலை உறுதி செய்துள்ள அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் கீழான மாகாண சபைகள் சட்டத்தை பூரணமாக அமுல்படுத்த விரும்பாத அல்லது அதனை இல்லாமலாக்கத் துடிக்கும் பேரினவாதத்திடமோ சிங்களத் தேசியவாதத்திடமோ தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வை இலகுவாக வென்றெடுத்துவிட முடியாது. தமிழ் மக்களின் தேசிய அபிலாட்சைகளுக்கான கோரிக்கையை பேரினவாதம் அல்லது சிங்களத் தேசியவாதம் தொடர்ந்து நிராகரித்துத் தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்கலை விரிவுபடுத்தி யுத்தமாக முன்னெடுத்தது. சிங்களத் தேசியவாதிகளும், பேரினவாதிகளும் அடிப்படைவாதிகளுமே தமிழ் மக்களின் சமகால அழிவுகளுக்கான பாரிய பொறுப்பை ஏற்க வேண்டும். அதே வேளை, தமிழ் மக்களின் தேசிய அபிலாட்சை களுக்கான கோரிக்கையை முடிந்த முடிவான 'பிரிவினைவாதப் போராட்டமாக' முன்னெடுத்த பழைமைவாதத் தமிழ்த் தேசியவாதி களும் தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.

புதிய ஜனநாயகப் புரட்சியின் நிகழ்ச்சி நிரலுக்குள் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஒருங்கிணைக்கப்பட்டு செயற்பட வேண்டிய அவசியத்தை எமது கட்சி உணர்ந்து செயற்படுகின்றது. ஆனால் தந்திரோபாயரீதியாகத் தேசிய ஜனநாயகப் புரட்சிக்கான வேலைத்திட்டத்தை ஏனைய சக்திகளின் பொது இணக்கத்துடன் அல்லது ஐக்கிய முன்னணி வேலைத்திட்டத்தினூடாக முன்னெடுக்க வேண்டிய கடப்பாட்டிலிருந்து கட்சி தவறிவிட இயலாது.

ஏனெனில் இன முரண்பாட்டைத் தணிப்பதற்கான முயற்சிகள் பல வழிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் பாகுபாடுகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும், போர் அழிவு களுக்கும் உட்பட்டிருக்கும் தமிழ் மக்கள் தங்கள் அரசியல், பொருளா தார, சமூக, பண்பாட்டுத் தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமையைக் கொண்டுள்ளனர்.

சிங்கள மக்களின் தலைமைகள் எனப்படும் ஆளும் வர்க்கங்களின் ஒடுக்குமுறைகளால் சிங்கள மக்களுடன் ஐக்கியமாக வாழ முடியாது என்ற நிலைமை தமிழ் மக்களிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இதனைச் சிங்கள மக்கள் புரிந்துகொண்டு ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதில் தமிழ் மக்களுடன் ஒத்துழைக்காவிட்டால் ஏகாதிபத்தியத் தலையீட்டினால் முழுநாட்டின் இறைமையும் முற்றாகப் பறிபோய், நிரந்தரப் பகையுடன் தேசிய இனங்கள் வாழ வேண்டிய அவல நிலை ஏற்படும். எனவே ஆளும் வர்க்கங்களின் மேலாதிக்கத்திலிருந்து சிங்கள மக்கள் தம்மை விடுவித்துக் கொண்டு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை-சமத்துவம்-சுயாட்சிக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டியது வரலாற்றுத் தேவையாகிறது. அதே போன்று தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு சார்பானதல்ல என்று நடைமுறையில் நிரூபிக்கும் வகையில் நிதானமாகச் செயற்பட வேண்டியது தமிழ் மக்களினது பொறுப்பாகும்.

புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்கக் கூடிய, அதற்குத் தலைமைப் பாத்திரத்தை வகிக்கும் நிலையில் இலங்கையின் தொழி லாளர் வர்க்கம் தற்போது தயார் நிலையில் இல்லாதபடியால், தேசிய ஜனநாயகப் புரட்சியை ஏனைய சக்திகளின் பொது உடன்பாட்டின் அடிப்படையில் அல்லது ஐக்கிய முன்னணியாக முன்னெடுப்பதில் தொழிலாளி வர்க்கம் பிரதான சக்தியாக இருந்து செயற்படுவது அவசியம். அதனூடாகவே புதிய ஜனநாயகப் புரட்சிக்குத் தலைமை தாங்கும் நிலைக்குத் தொழிலாளர் வர்க்கம் வளர்வதுடன், அப் புரட்சிக்கான சூழ்நிலையையும் ஏற்படுத்த முடியும்.



படிப்பகம்

தேசிய ஜனநாயகப் புரட்சிக்கான வேலைத்திட்டத்தில் தமிழ், முஸ்லீம், மலையகத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை உள்ளடக்கி அதனை வென்றெடுக்க வெகுஜனப் போராட்ட அரசியலை முன்னெடுக்க வேண்டும். இது பொது உடன்பாட்டுடனான ஐக்கிய முன்னணி வேலைத்திட்டம் என்பதால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படைகளை அப்படியே இணைத்துவிட முடியும் என எதிர்பார்க்க முடியாது. அதனால் அதற்குரிய வரையறைகளுடன் குறைந்தபட்ச அரசியல் தீர்விற்கான வேலைத்திட்டங்களை இணைத்துக்கொள்ள வேண்டும்.

ஆனால் இவ் வேலைத் திட்டத்திற்கு வெளியில், அடக்கப்படும் தேசிய இனங்களுக்கு உரிமைகள், சலுகைகள் வழங்கப்படுவதற்காக ஏதேனும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமிடத்து அவற்றை விமர்சனத் துடன் ஊக்குவிப்பதில் கட்சி பின்னிற்காது. (இது பேரினவாதத்திற்கு எதிரான நிலைப்பாடன்றிச் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் நிலைப்பாடல்ல என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.)

தேசிய ஜனநாயகப் புரட்சியில் ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளும், இடதுசாரி, முற்போக்கு, ஜனநாயக சக்திகளும் முற்போக்கான அம்சங்களைக் கொண்ட தேசிய சக்திகளும், சாதிய, பெண் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான சக்திகளும், சினேக பூர்வமான அணிகளாகும். தேசிய இன விடுதலைப் போராட்ட சக்திகள் முற் போக்கு நிலைப்பாட்டை எடுக்கும் போது, அதாவது ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் உள்நாட்டு அடக்குமுறை சக்திகளை எதிர்க்கும் போது, எம்மால் அவற்றுடன் ஐக்கியப்பட முடியும். அத்துடன் ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றை ஆதரிக்கும் சக்திகளுடனும் ஏனைய தேசிய இனங்களுடனான ஐக்கியம் சமத்துவம் போன்ற புரிந்துணர் வுடன் செயற்படும், செயற்பட விருப்பம் கொண்டுள்ள சக்திகளுடனும் இணக்கப்பாட்டுடன் செயற்படுவது அவசியம். ஏகாதிபத்திய எதிர்ப்பு, உள்நாட்டு அடக்குமுறை சக்திகளுக்கு எதிர்ப்பு, ஜனநாயக- தொழிற்சங்க- மனித உரிமைகள் ஆதரவு போன்றவை தேசிய சக்திகளிடம் முன் நிபந்தனைகளாகக் கொள்ளவேண்டிய முற்போக்குக் கூறுகளாகும். அவ்வாறான முற்போக்கு கூறுகளைக் கொண்ட சக்திகளுடன் பொது இணக்கப்பாட்டுடன் ஐக்கிய முன்னணியாகிச் செயற்படுவது மாக்சிய லெனினியவாதிகளின் ஐக்கியமும் போராட்ட மும் என்ற நிலைப்பாட்டிற்கு உட்பட்டதாகும்.

இலங்கையில் ஒடுக்கப்படுகின்ற தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள், மலையகத் தமிழ் மக்கள் என்போரது தேசிய அபிலாட்சைகளுக்கான கோரிக்கைகளே தேசிய இனப் பிரச்சினையாகும். இலங்கையின்

www.padippakam.com

நான்கு தேசிய இனங்களும் அரசியல் பொருளாதார சமூகப் பண்பாட்டு விடயங்களில் பேரினவாத மேலாதிக்கம் இல்லாது தம்மைத் தாமே நிர்வகித்துக் கொள்ளும் அதிகாரங்களை அவர்களுக்கு உறுதி செய்வதன் அடிப்படையிலேயே தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும். அதே போன்று பறங்கியர்களினதும் மலாய் சமூகத்தவரதும் ஆதிவாசிகளினதும் பிற தேசிய சிறுபான்மையினரதும் உரிமைகளும் உறுதி செய்யப்படவேண்டும்.

நான்கு தேசிய இனங்களும், பல சமூகங்களும் வாழ்கின்றன என்ற அடிப்படையில் இலங்கை பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு என்பதை ஏற்றுக் கொள்வது தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்ப தற்கான மிகவும் அடிப்படையான முன்நிபந்தனை ஆகும்.

மேற்கூறிய அடிப்படைகளைக் கொண்டு தேசிய இனப் பிரச்சினைக் கான தீர்வுகளை வென்றெடுக்க உடனடி வேலைத்திட்டமொன்றையும், நீண்டகால வேலைத்திட்டமொன்றையும் புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி முன்மொழிகிறது.

## தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கான உடனடி வேலைத்திட்டம்.

1. இவ்வளவு அழிவிற்குக் காரணமான தேசிய இனப் பிரச்சினைக் குப் பேச்சுவார்த்தையின் மூலம் குறிப்பிட்ட கால வரையறைக்குள் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய அதிகாரப் பங்கீட்டை உறுதி செய்யும் வகையில் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.

2. இடம்பெயர்ந்துள்ள வடக்கு கிழக்கு மக்கள் அனைவரும் அவர் களின் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும். அவர்களுக்கு புனர்வாழ்வு- புனரமைப்பு ஏற்பாடுகள் முழுமையாகச் செய்து கொடுக் கப்பட வேண்டும். ஏற்கனவே இயங்கிய பாடசாலைகள், வைத்திய சாலைகள், மற்றும் பொது இடங்கள் அனைத்தும் மீண்டும் இயங்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். சிவில் நிர்வாகம் முழுமையாக இயங்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். போக்குவரத்துத் தடை களும், நடமாடுவதற்கான தடைகளும் நீக்கப்பட வேண்டும்.

3. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் போன்றவற்றால் 'பாதுகாப்புக் காரணங் களின்' பேரில் அபகரிக்கப்பட்ட காணிகள், கட்டிடங்கள் அவற்றின்



படிப்பகம்

www.padippakam.com

சொந்தக்காரர்களுக்கு அல்லது அவர்களின் வழித்தோன்றல்களுக்கு மீளக் கையளிக்கப்பட வேண்டும்.

4. யுத்தம் காரணமாக உயிரிழப்புகள், சொத்தழிவுகளால் பாதிக் கப்பட்டுள்ள மக்களுக்குப் போதிய நிவாரணமும், நட்டஈடும் அளிக்கப் பட வேண்டும்.

5. காணாமற் போனவர்களதும் கைது செய்யப்பட்டவர்களதும் விவரங்கள் உறவினர்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டும். காணாமற் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி விசாரணை நடத்தி, அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் விடுதலை செய்யப்படல் வேண்டும். இல்லாவிட்டாற் காணாமல் போனமைக்குக் காரணமானவர் களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. சந்தேக நபர்களாகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் அரசியற் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

7. அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும்.

8. யுத்தத்தின் பேராற், குறிப்பாக வடக்குக் கிழக்கில், தொடர்ந்து மறுக்கப்பட்டு வருகின்ற ஜனநாயக, தொழிற்சங்க, மனித உரிமைகள் உறுதி செய்யப்பட்டு, உயிர் வாழ்வதற்கான, நடமாடுவதற்கான, கருத்துத் தெரிவிப்பதற்கான உரிமைகள் மீள நிலை நிறுத்தப்பட வேண்டும்.

9. வடக்கு கிழக்கில் இடம்பெற்றுள்ள திட்டமிட்ட பேரினவாத, இராணுவக் குடியேற்றங்களும் அபிவிருத்தியின் பெயரிலான நில அபகரிப்புத் திட்டங்களும் நிறுத்தப்பட்டு அகற்றப்பட வேண்டும். எதிர் காலத்தில் அவை இடம்பெறாதவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும்.

10. வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் தமிழ் மக்கள் மீதான இனப் பாகுபாடு, புறக்கணிப்பு நீக்கப்பட்டு அவர்களின் இருப்பும் பாது காப்பும் சுதந்திரமும் உறுதி செய்யப்பட வேண்டும்.

11. தமிழ் மொழியும் ஆட்சிமொழி என்பது நடைமுறையில் நாடெங் கும் செயற்படுத்தப்பட வேண்டும்.

12. 2009 ஆண்டு மே 19 வரை யுத்தக் குற்றம் புரியப்பட்டுள்ளதா என்பது பற்றிய சுதந்திரமான, நம்பகத்தன்மை கொண்ட, நேர்மையான



படிப்பகம்

விசாரணை நடாத்தப்பட்டுக் குற்றம் புரிந்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்.

## நீண்டகாலத் தீர்வுக்கான வேலைத்திட்டம்

ஒரு தேசிய இனம் தனது தலைவிதியைத் தானே தீர்மானித்துக் கொள்ளும் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு சுயாதீனத் தைக் கொண்டுள்ளது. இது அடக்குகின்ற ஏகாதிபத்தியத்திடமிருந்து, தேசத்திடமிருந்து, தேசிய இனத்திடமிருந்து பிரிந்து செல்லும் உரிமையையும் கொண்டது என்பதை எமது கட்சி நிராகரிக்கவில்லை. அதே வேளை, இந்தச் சுயநிர்ணய உரிமை என்பது, ஏகாதிபத்திய எதிர்ப்பு, உள்நாட்டு அடக்குமுறை அரசின் மீதான எதிர்ப்பு, தொழி லாளி வர்க்க நிலைப்பாடு போன்றவற்றுக்கு அப்பால், நிபந்தனை யற்றதாக இருக்க முடியாது என்ற நிலைப்பாட்டை எமது கட்சி உறுதியாகக் கொண்டுள்ளது.

தோழர் லெனினுடைய காலத்திலும் சோவியத் யூனியனின் காலத் திலும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடவேண்டி இருந்தது போன்று, இன்றும் ஏகாதிபத்திய காலகட்டமே தொடர்கிறது. என்றாலும் ஏகாதிபத்திய உலகமயமாதல் சூழ்நிலையில் புதிய நிலைமைகள் காணப்படுகின்றன. சுயநிர்ணய உரிமைப் போராட்டங்கள் முன்னெடுக் கப்படுவதற்குத் தடையாக ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் அமைந்துள்ளது. ஏறக்குறைய எல்லாச் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களிலும் ஏகாதிபத்தியம் ஊடுருவி விடுகிறது. பால்கன் நாடுகளின் பிரிவினை தொடக்கம் தென் சூடான் பிரிவினை வரை ஏகாதிபத்திய தலையீடுகளாலேயே நாட்டுப் பிரிவினைகள் நடந்தேறி யுள்ளன. அந் நாடுகளில், உள்நாட்டு அடக்குமுறையாளர்களிட மிருந்து விடுதலையாவது என்ற பெயரில், தேசிய இனங்கள் ஏகாதி பத்தியப் பிடிக்குள் மாட்டிக்கொண்டுள்ளன. இதனை உண்மையான தேசிய இன விடுதலை என்றோ சுயநிர்ணய உரிமையென்றோ அர்த்தப்படுத்த முடியாது. அதே வேளை தமக்குச் சார்பில்லாத அல்லது தமது அக்கறைகளுக்கு உதவாத தேசிய இன விடுதலைப் போராட்டங்களை ஏகாதிபத்தியம் அடக்குகிறது. அரசுகளுடன் இணைந்து முறியடித்தும் வருகிறது.

இந்த அடிப்படையில் ‘பிரிவினைவாதக் கோரிக்கையுடன்’ முன்னெடுக்கப்படும் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் அல்லது தேசிய இன விடுதலை போராட்டம் என்ற பேரில் முன்னெடுக்கப்படும்

'பிரிவினைவாதப் போராட்டங்களில் பொதுவாக இரண்டு போக்குக் களை அவதானிக்க முடியும். ஒன்று, சமகாலத்தில் ஏகாதிபத்திய ஆதரவு அல்லது தலையீடின்றி பிரிவினை சாத்தியமில்லை. இரண்டாவது, ஒரு தேசிய இனத்தை ஒடுக்குகின்ற அரசு அதன் தளமாகக் கொண்டுள்ள பெருந் தேசிய இனத்தைத் தொடர்ந்து இலகுவாக தனது பிடிக்குள் இனவாத அடிப்படையில் வைத்திருக்க வும், ஒடுக்கப்படுகின்ற தேசிய இனத்தின் உரிமைக் கோரிக்கைகளை இலகுவாக நசுக்கிவிடவும் 'பிரிவினைவாத எதிர்ப்பு' என்ற அடிப்படை முன்பை விடச் சமகாலத்தில் அதிகம் உதவுகிறது. அதாவது 'பிரிவினைவாதம்' ஏகாதிபத்தியத்திற்கு சார்பானதெனக் காட்டிப், போராடுகின்ற தேசிய இனத்தின் மீது மேற் கொள்ளும் இன மேலாதிக்கத்தை நியாயப்படுத்த அடக்குகின்ற அரசுகளுக்கு அது வசதியாகிவிடுகிறது. இதனால் அடக்குகின்ற தேசத்தினது அல்லது தேசிய இனத்தினது தொழிலாளர்களதும் விவசாயிகளதும் ஜனநாயக சக்திகளதும் ஆதரவை அடக்கப் படுகின்ற தேசிய இனங்கள் பெற்றுக் கொள்வதில் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்தே வருகின்றன. எனவே சமகாலத்தில் 'பிரிவினைவாதம்' பெரும்பாலும் ஏகாதிபத்தியத் திற்கு நேரடியாகவும், அடக்குகின்ற அரசுகளுக்கு எதிர் மறையாகவும் உதவுகிறது. இவ்வகையான சூழ்நிலையில் 'பிரிவினைவாதத்தை' அடிப்படையாகக் கொண்டுள்ள போராட்டங்களை மாக்சிச லெனினிசவாதிகள் மிகவும் அவதானத்துடனேயே அணுக வேண்டியவர் களாகிறார்கள். ஏகாதிபத்தியத்திற்கும் மேலாதிக்கத்திற்கும் எதிரான 'சுயநிர்ணய உரிமையை' ஏற்படுத்த அவற்றின் உதவியுடன் எப்படி வென்றெடுப்பது என்ற கேள்வி எழுகிறது. அடக்குமுறை அரசிற்கும், ஏகாதிபத்தியத்திற்குமிடையிலான முரண்பாடுகளைச் சரியாகக் கையாண்டு சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை முன்னெடுப்பது என்பது வேறு. தேசிய இனங்கள் ஏகாதிபத்தியத்திடம் சரணடைவது என்பது வேறு. ஏகாதிபத்தியத்தைப் பயன்படுத்துவது என்பது சரணடை வாகவே இருக்க முடியும்.

பிரிந்து போகும் உரிமை என்பதை நாடுகளைப் பிரித்துச் சிறிய சிறிய அரசுகளை அமைக்கும் முயற்சியாக அர்த்தப்படுத்தக் கூடாது என்று தோழர் லெனின் கூறியதை இன்றைய சூழ்நிலையுடன் பொருத்திப் பார்க்கும் கடப்பாட்டை எமது கட்சி கொண்டுள்ளதுடன் பிரிவினைப் போராட்டங்களைப் பயன்படுத்தி ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு உதவக் கூடியவாறு நாடுகளைத் துண்டாடுவதையும் எமது கட்சி ஏற்கவில்லை. பிரிந்து செல்லும் உரிமை என்பது சமகாலத்தில்

www.padippakam.com

(பால்கன் பிரிவினை போன்று) ஏகாதிபத்தியத்தைப் பலப்படுத்துவதாக அமைந்து விடுகிறது.

சுயநிர்ணய உரிமை என்பது முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக் கையாகும். முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக்கையாக ஏகாதிபத் தியத்திற்கும் அடக்குமுறை அரசிற்கும் எதிராக முன்னெடுக்கும் போது மாக்சிச லெனினிசவாதிகள் அதனை ஆதரிப்பது அவர்களின் கடமை யாக இருந்தது. சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை ஒரு முதலாளித் துவ ஜனநாயகக் கோரிக்கையாக முன்னெடுக்கப்படமுடியாத சூழலில் அல்லது மாக்சிச லெனினிசவாதிகள் தங்களின் கையில் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை எடுக்கும்போது அதனைப் பிரிவினைவாத/ தேசியவாத/முதலாளித்துவ கோரிக்கையாகவன்றிப் புதிய-ஜனநாயக/ சோஷலிஸக் கோரிக்கையாகவே முன்னெடுக்க வேண்டியவர்களாகின் றனர். சோவியத் புரட்சிக்கு முன்னரான காலத்தில் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை மிகவும் வலுவான முதலாளித்துவ கோரிக்கை யாக இருந்தது. அதே சூழ்நிலை சீனப் புரட்சியின் காலகட்டத்தில் இருக்கவில்லை. தொழிலாளிவர்க்கப் போராட்டத்தின் பகுதியாகவே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை கோரிக்கை உள்ளீர்க்கப் பட்டது. அதாவது முதலாளித்துவ ஜனநாயகப் போராட்டமாக சுய நிர்ணய உரிமைப் போராட்டம் முன்னெடுக்கப்படாத/படமுடியாத சூழ்நிலையில், அது புதிய ஜனநாயகப் புரட்சிக்கான போராட்டத்தின் பகுதியாகிறது அல்லது சோஷலிஸப் புரட்சியின் பகுதியாகிறது. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடக்கப்பட்ட காலத்திற் கொண்டிருந்த தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து செல்லும் உரிமை யுடன் கூடிய சமஷ்டி ஆட்சிமுறை என்ற சோவியத் நிலைப்பாட்டை ஒட்டியது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை களில் ஏகாதிபத்தியத் தலையீட்டுக்கு இடங்கொடுக்க முடியாது என்ற அடிப்படையில் அதை 1930களில் மாற்றிக் கொண்ட, தோழர் மாஓவின் தலைமையிலான அன்றைய சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கியப்பட்ட சீனாவுக்குள் தேசிய இனங்களுக்கு சுயாட்சி முறைமையை முன் வைத்தது. அதனையே புரட்சியின் வெற்றிக்குப் பின்னர் உருவாக்கிய அரசியல் யாப்பில் வளர்த்தெடுத்தது. சோவியத் யூனியன் சமஷ்டியாக இருந்தது. சீனம் பல்தேசிய இனங்களின் சுயாட்சிகளைக் கொண்ட ஒற்றையாட்சியாக அமைந்தது.

சமகால இலங்கையின் சூழ்நிலை சோவியத் புரட்சிக்காலத்துடனோ, சீனப் புரட்சி காலத்துடனோ ஒத்ததாக இல்லை. எனவே இலங்கையின் குறிப்பான சூழ்நிலை, சர்வதேசச் சூழல், பிராந்தியச் சூழல் என்பவற்றுக்கு ஏற்பவே தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வும்



படிப்பகம்

சுயநிர்ணய உரிமைப் பிரயோகமும் அமைய வேண்டியுள்ளது. சோவியத் புரட்சியில் தொழிலாளி வர்க்கப் புரட்சி இரண்டு கால கட்டங்களாகப் பிரிக்கப்படாதபோதும் முதலில் தொழிலாளர்-விவசாயி களின் கூட்டுப் புரட்சி என்றும் பின்னர் சோஷலிஸப் புரட்சியென்றும் அமைந்தது. சீனா அரைக் கொலனித்துவ, அரைப் பிரபுத்துவ நாடா கையால் அங்கு புதிய ஜனநாயகப் புரட்சி என்றும் சோஷலிஸப் புரட்சி என்றும் இரண்டு காலகட்டங்களாகப் பிரித்து நடைமுறைப் படுத்தப்பட்டன.

இலங்கை இன்று அரைக் கொலனித்துவ அரைப் பிரபுத்துவ நாடல்ல. ஆனால் நவ கொலனித்துவ நாடாகும். புதிய ஜனநாயகப் புரட்சியே இலங்கையில் வர்க்கப் புரட்சியின் முதலாவது காலகட்டம் என்று எமது கட்சி வேலைத்திட்டத்தை வகுத்துள்ளது. இதன் மூலம் இலங்கையின் சமகாலச் சூழலுக்கு ஏற்ப புதிய ஜனநாயகப் புரட்சியின் பிரயோகத்தை எமது கட்சி விரிவாக்கியுள்ளது எனலாம்.

அதே போன்று இலங்கையின் தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமைப் பிரயோகம் தொடர்பாகவும் விரிவான பார்வையை எமது கட்சி கொண்டுள்ளது. 'சுயநிர்ணய உரிமை சமன் பிரிவினை' என்ற வாறன்றி ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் 'சுயநிர்ணய உரிமை-சமத்துவம்-சுயாட்சி' என்ற அடிப்படையில் தேசிய இனங்களின் உரிமை உறுதிசெய்யப்பட வேண்டுமெனச் சுயநிர்ணய உரிமையின் பிரயோகத் தை எமது கட்சி விரிவாகப் பார்க்கிறது. நாடுகளுக்கும் தேசங்க ளுக்குமாக இருந்த சுயநிர்ணய உரிமையைத் தேசிய இனங்களுக் கான உரிமையாக, நிலத் தொடர்ச்சியற்றுப் பரந்துவாழும் தேசிய இனங்களுக்குமான உரிமையாக விரிவாகிப் பார்க்கிறது. அந்த அடிப்படையிலேயே இலங்கையில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், மலையகத் தமிழர் ஆகிய நான்கு தேசிய இனங்கள் வாழ்வதாகவும், நிலத்தொடர்ச்சியற்று வாழும் முஸ்லீம், மலையகத் தமிழ் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை உறுதி செய்யப்பட வேண்டுமென்பதிலும் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகள் பாதுகாப்புக் குறித்தும் ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகள் பாதுகாப்புக் குறித்தும் தெளிவுடன் உள்ளது. அந்த அடிப்படையிலேயே நிர்வாகப் பரவல், அதிகாரப் பரவல், அதிகாரப் பங்கீடு என்பவற்றுக்கு மேலாகச் சுயாட்சிப் பிரதேசம், சுயாட்சி உள்ளமைப்பு, சுயாட்சி உப-உள்ளமைப்பு போன்ற சுயாட்சி அலகுகளை முன்வைத்துள்ளது. அதிகபட்ச சுயாட்சியின் அடிப்படை யில் சமத்துவத்துடன் சுயநிர்ணய உரிமையுடன் தேசியங்கள்

www.padippakam.com

கூட்டிணைவாக (Confederation of nationalities of Sri Lanka) இலங்கை கட்டமைக்கப்பட வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான இலங்கையின் புதிய ஜனநாயகப் புரட்சியின் பகுதியாக இலங்கையின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் அமைந்துள்ளதென்பது எமது கட்சியின் நிலைப்பாடாகும். புதிய ஜனநாயக அரசக் கட்டமைப்பில் தேசிய இனங்கள் அவற்றின் சுயவிருப்பில் அடிப்படையில் உயர்ந்த பட்ச சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிக் கொள்ளும் உரிமை யுடையன. அவ்வுரிமையை மறுக்க அங்கு முதலாளிவர்க்கம் ஆட்சி யில் இராது. அதனால் ஏகாதிபத்தியம் தேசிய இனங்களின் சுயநிர் ணய உரிமைக் கோரிக்கையைப் பயன்படுத்தும் பலவீனமான சூழ் நிலை இராது. தேசிய இனங்களின் கோரிக்கை முதலாளித்துவக் கோரிக்கையாகவோ, நாடுகளைத் துண்டாடும் முதலாளித்துவச் சூழ்ச்சியாகவோ இராது. அச் சூழ்நிலையிற் பிரிந்து போகும் உரிமை யின் அவசியம் பற்றித் தீர்மானிப்பது இலகுவானதாக இருக்கும். பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய உயர்ந்தபட்ச சுயாட்சியுடன் கூட்டிணைவாகத் தேசிய இனங்கள் ஒரே நாட்டில் ஐக்கியமாக வாழ்வது பற்றித் தீர்மானிக்க இலகுவாக இருக்கும். சீனப் புரட்சியின் பின், பிரிந்துபோவதற்கான தேவை அங்கு வாழும் தேசிய இனங் களுக்கு ஏற்படவில்லை. சுயாட்சி முறையையே அவை ஏற்றுக் கொண்டன. சன்டினிஸ்டா தலைமையிலான புரட்சிக்குப் பின் நிக்கரா குவாவின் தேசிய இனங்கள் சுயாட்சி அதிகாரங்களுடன் ஐக்கியப்பட் டிருக்கும் சூழ்நிலையே ஏற்பட்டது.

சீனா, நிக்கராகுவா புரட்சிகட்குப் பிந்திய சூழ்நிலைகள் இலங்கைக் கும் பொருந்தும் என்றில்லாவிட்டாலும் புதிய சூழ்நிலையில் இலங்கை யின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை நீண்டகால அடிப் படையில் நோக்குவது நல்லது.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கான நீண்டகால வேலைத்திட்டம் புதிய-ஜனநாயகப் புரட்சியினூடாகவே சாத்தியம் என்பதைக் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருவதுடன் சில அடிப்படை களை இங்கு முன்வைக்கிறது.

**1. இலங்கை சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் தேசிய இனங்களும் ஆதிவாசிகள், பறங்கியர்கள் போன்ற சமூகத்தினரும், பலமொழி பேசுபவர்களும், பல மதத்தை தழுவுபவர்களும், பல பண்பாடுகளைக் கொண்டவர்களும் வாழும் நாடு என்பதை அரசியலமைப்பில் உறுதி செய்தல் வேண்டும்.**



படிப்பகம்

2. அரசியலமைப்பில் தேசிய இனங்களின் உரிமைகள் சுயநிர்ணய உரிமை-சமத்துவம்-சுயாட்சி என்ற அடிப்படையில் உறுதி செய்யப்பட வேண்டும்.

3. இன, மத, சமூக, பால் பாகுபாடுகளும், அடக்குமுறைகளும் அரசியலமைப்புக் குற்றங்களாகப்பட்டும் அப் பாகுபாடுகளையும் அடக்குமுறைகளையும் மேற்கொள்வோர் அரசியலமைப்பு நீதிமன்றத் தினால் தண்டிக்கப்பட வேண்டும். இன, மத, சமூக, பால் ரீதியான வன்முறைகளில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடுபவர் களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும்.

4. அரசியலமைப்புப் பிணக்குக்களையும், தேசிய இனங்களுக் கிடையேயும் சமூகங்களுக்கிடையேயுமான பிணக்குகளைத் தீர்க்க அரசியலமைப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும். அரசியலமைப்பு நீதிமன்ற நீதியரசர்கள் எல்லாத் தேசிய இனங்களையும், சமூகங் களையும் சமமாகப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் நியமிக்கப்பட வேண்டும்.

5. வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்பட்டு ஒரே சுயாட்சிப் பிரதேசமாக்கப்பட வேண்டும். அதில் முஸ்லீம்களுக்கு சுயாட்சி உள்ளமைப்பும், அங்கு வாழ்கின்ற சிங்கள மக்களுக்கு உப உள்ளமைப்புகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். இன ஒடுக்கல், போர் போன்ற பாதிப்புகளிலிருந்து மீண்டு தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனின் தமிழ் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வரும் பாரம்பரிய பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒரே சுயாட்சிப் பிரதேசமாக இருப்பது அவசியம். வடக்குத் தமிழ் மக்களுக்கும் கிழக்குத் தமிழ் மக்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள இடைவெளி வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் ஆதிக்க வர்க்கங்களினாலும் பேரினவாதிகளாலும் அன்றிச் சாதாரண மக்களால் ஏற்படுத்தப்பட்டதல்ல. அந்த ஆளும் வர்க்க ஆதிக்கச் சக்திகளின் அதிகாரப் போட்டிகளுக்கு மக்கள் இரையாக்கப்படாமல் இருக்க, வடக்கு கிழக்கு ஒரே சுயாட்சி பிரதேசமாக இருப்பதுடன் வடக்கின் மக்களுக்கும் கிழக்கின் மக்களுக்குமிடையே இருக்கும் இடைவெளியை நீக்கவும், சந்தேகங்களைப் போக்கவும் அதிகார, நிர்வாகப் பரவலாக்கலும் பாதுகாப்புகளும் ஏற்படுத்தப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசத் தில் அல்லது பிரதேசங்களை ஒருங்கிணைத்து வடக்கு கிழக்கு சுயாட்சி பிரதேசத்தினுள், முஸ்லிம் மக்களுக்கென சுயாட்சி, உள்ளமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் முஸ்லீம் மக்களின் சந்தேகங்களும் அச்சங்களும் போக்கப்பட்டுத் தமிழ்

www.padippakam.com

மக்களும் முஸ்லீம் மக்களும் ஐக்கியமாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த முடியும். அதே போன்று, வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்கள் அச்சமின்றி வாழவும் தமிழ், முஸ்லீம் மக்களுடன் ஐக்கியமாக வாழவும் வடக்கு கிழக்கு சுயாட்சிப் பிரதேசத்தில் அங்கு வாழும் சிங்கள மக்களுக்கென சாத்தியமான சுயாட்சி உப அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். மேற்கண்டவாறு அமையப் பெறும் போது வடக்கு கிழக்கு சுயாட்சி அமைப்பு சுதந்திரமாக இயங்கவும், அங்கு வாழும் அனைத்து மக்களும் ஐக்கியமாக வாழவும் வழி செய்ய முடியும்.

6. வடக்கு கிழக்கிற்கு வெளியில் மலையகத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் வாழும் மலையகத் தமிழ் மக்களுக்கென சுயாட்சி அமைப்பு, சுயாட்சி உப அமைப்பு, உப உள்ளமைப்புகள் ஏற்படுத்தப் பட வேண்டும். நிலத்தொடச்சியான பெரிய பகுதியுடன் நிலத்தொடர்ச்சி யற்ற பகுதிகளை நிர்வாக ரீதியாக ஒருங்கிணைத்து சுயாட்சி அமைப்பை ஏற்படுத்தலாம். அல்லது மலையகத் தமிழ் மக்களின் சனச்செறிவிற்கு ஏற்பச் சுயாட்சி, சுயாட்சி உள்ளமைப்பு, உப உள்ளமைப்புகளை ஏற்படுத்தலாம்.

7. வடக்கு கிழக்கிற்கு வெளியில் வாழும் முஸ்லீம் மக்களுக்கும் அவர்களின் சனச் செறிவிற்கு ஏற்பச் சுயாட்சி உள்ளமைப்பு, உப உள்ளமைப்புகளை ஏற்படுத்தலாம். பறங்கியர், மலாயர், ஆதிவாசிகள், போன்ற சமூகங்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் சமத்துவத் தையும் உறுதி செய்ய விசேட ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

8. சுயாட்சி அமைப்பொன்று ஆகக் குறைந்தது பின்வரும் அதிகாரங்களையாவது கொண்டிருக்க வேண்டும்.

i சுயாட்சிப் பிரதேசக் காணிகள், குடியேற்றங்கள், காணிப் பங்கீடு, கடல் வளம், வர்த்தகம் போன்றன அதன் பொறுப்பிலேயே இருக்கவேண்டும். மத்திய அரசாங்கம் குடியேற்றங்களையும் அபி விருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ளும் போது பிரதேச சுயாட்சி அமைப்புக்களுடன் கலந்துரையாடி அவற்றின் பங்களிப்புடனேயே செய்யவேண்டும்.

ii சுயாட்சிப் பிரதேச உள்ளகச் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட அவற்றுக்கெனப் பிரத்தியேகமாகப் பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும்.

iii சுயாட்சிப் பிரதேச மக்களின் மொழி, பண்பாடு, போன்றவற்றின் காப்பாளனாக சுயாட்சி அமைப்பு இயங்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

**iv சுயாட்சிப் பிரதேசக் கல்வி, சுகாதாரம், போக்குவரத்துப் போன்றன சுயாட்சி அமைப்புக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.**

**v மத்திய அரசின் தீர்மானங்கள் சுயாட்சி அமைப்பிற்கும் உள்ளமைப்பிற்கும், உப உள்ளமைப்புகளுக்கும் பாதகமெனச் சுயாட்சிகள் கருதினால் அவை பற்றி அரசியலமைப்பு நீதிமன்றத் தினால் இறுதித் தீர்வு காணப்படும்வரை அம் முடிவுகளைச் சுயாட் சிகள் அவற்றின் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தாமல் விடலாம்.**

**vi அதே போன்று சுயாட்சி அமைப்பின் தீர்மானங்கள் மத்திய அரசிற்கு பாதிப்பை ஏற்படுத்துமெனக் கருதினால் அதன் கீழ் இயங் கும் சுயாட்சி உள்ளமைப்பு, உப உள்ளமைப்புகள் அவற்றை அவற் றின் பிரதேசங்களில், தீர்மானங்கள் பற்றி அரசியலமைப்பு நீதிமன்றத் தினால் இறுதி தீர்வு காணப்படும்வரை நடைமுறைப் படுத்தாமல் விடலாம்.**

மேற்கூறப்பட்ட அடிப்படையில் புதிய ஜனநாயக அரச கட்ட மைப்பில் இலங்கையின் தேசிய இனங்கள் அவற்றின் சுயவிருப்பின் அடிப்படையில் உயர்ந்தபட்ச சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிக் கொள்ளும் பிரிந்துபோகும் உரிமையுடனான சுயாட்சியுடன் கூட்டிணை வான (Confederation) ஐக்கிய இலங்கை மக்கள் குடியரசைக் கட்டி யமைக்க வேண்டும்.

இவற்றை வென்றெடுக்கத் தேசிய இனங்களிடையே ஐக்கியம் அவசியமாவதால் நாம் தேசிய இனங்களிடையேயான அடக்கப் படுகின்ற, சுரண்டப்படுகின்ற தொழிலாளர்கள், விவசாயிகள், சிறு உற்பத்தியாளர்கள், பெண்கள், சாதிரீதியாக அடக்கப்பட்டோர் ஆகி யோரை இணைத்தும் அவர்களின் பொது உடன்பாட்டுடனும் வெகு ஜனப் போராட்டங்களை அந்தந்தத் தளங்களிலும், கூட்டிணைந்த வையாக முன்னெடுக்க வேண்டும். அதற்கு தலைமை தாங்கும் கட்சியாக புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியைச் சக்தி மிக்கதாக்குவோம். தந்திரோபாயரீதியாகத் தேசிய ஜனநாயக வேலைத் திட்டத்தினூடாக புதிய ஜனநாயகப் போராட்டத்தை மேற்கொண்டு தேசிய இனங்களின் ஆகக் கூடிய சுயநிர்ணய உரிமை- சமத்துவம்- சுயாட்சியை நிலைநாட்டித் தேசிய இனங்களின் சமத்துவக் கூட்டிணை வாக (United Socialist Confederation of Nationalities of Sri Lanka) ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவோம்.

*****



படிப்பகம்

www.padippakam.com

# சிவில் சமூகமும் என்.ஜி.ஓ. சமூகமும்

*- திருமுகன் -*

சிவில் சமூகம் என்ற கருத்தாக்கம் முதலில் இத்தாலிய மாக்ஸியச் சிந்தனையாளரும் ஃபாஸிஸ எதிர்ப்புப் போராளியுமான அந்தோனியோ கிராம்ஸ்ச்சியால் முன்வைக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டது. அவர் அரசு யந்திரத்தின் கருவிகளாகச் செயற்படுவோரும் அதிகாரத்துடனும் தொடர்புடையோரும் நீங்கலாக எஞ்சியுள்ள சமூகத்தை சிவில் சமூகமென அடையாளப்படுத்தி அச் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் மேலாதிக்கச் சித்தாந்தம் பற்றியும் சமூக மாற்றம் பற்றியும் விரிவாக ஆராய்ந்த முக்கியமான சிந்தனையாளராவார். அரசியல் ஆய்வுகளில் சிவில் சமூகம் என்ற சொற்றொடர் 1980கள் வரை பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை. சிவில் சமூகம் என்பதை அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு அமைப்பு என்ற பொருளில் கிராம்ஸ்ச்சி என்றுமே பயன்படுத்தவில்லை.

அச் சொற்றொடர் 1980களில் பெருமளவும் அரசியலிலிருந்து மக்களை அந்நியப்படுத்துகிற நோக்குடன் பரவலாக்கப்பட்டது. இன்று ஏகாதிபத்தியத்தின் முகவர்களாக, அல்லற்படும் சமூகத்தின் உயிர்ச் சத்தை உறுஞ்சிச் சொகுசு வாழ்க்கை வாழும் என்.ஜி.ஓ. புல்லுருவிகள் சிவில் சமூகம் என்பதை இரண்டு நோக்கங்கட்காகப் பயன்படுத்துகின்றனர். முதலாவது பொது மக்களை அரசியலினின்று தனிமைப்படுத்துவது. மற்றது சிவில் சமூகத்தின் சார்பில் பேச வல்லவர்களாகத் தம்மை நிலைநிறுத்துவது.

சிவில் சமூகம் என்ற பொது அடையாளத்தின் மூலம் சமூகத்தின் வர்க்க வேறுபாடுகளையும் பலபேரின் உழைப்பை ஒரு சிலர் சுரண்டுவதால் ஏற்படுகிற முரண்பாடுகளையும் மூடி மறைக்க என்.ஜீ.ஓக்கள் தீவிரமாக முயலுகின்றனர். சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவினருக்கு அதிகாரத்துவம் வழங்குவது, சிவில் சமூகத்தின் குரலை வலுவூட்டுவது என்றவாறான புனைவுகள் மூலம் என்.ஜீ.ஓக்கள் செய்ய முயல்வது என்ன? தமது ஆளுமைக்குட்பட்ட சமூகப்பிரிவினருக்கு



படிப்பகம்

உதவுகிற பேரில் அவர்களது சுயமுயற்சிக்குக் குழிபறிக்கிறார்கள். உதவி பெறும் சமூகங்கள், என்.ஜீ.ஓ. நிதியுதவியில் தங்கியிருக்கும்படி பழக்கப்படுகின்றன. என்.ஜீ.ஓக்களால் சமூகங்களுள் உருவாக்கப்படு கிற தலைமைத்துவம் என்பது என்.ஜீ.ஓக்களிடம் உயர்ந்த ஊதியம் பெற்று மக்களை அரசியலிலிருந்து விலக்குகிற பணியை முன்னெடுக் கும் எடுபிடிகளையே தோற்றுவிக்கிறது. இந்தக் கூலிப் படைகள் செய்கிற சீரழிவு வேலைகள் பற்றி இப்போது நிறையவே எழுதப் பட்டுள்ளது. பிரபல எழுத்தாளர் அருந்ததி ராய், அண்மையில், “உதவி என்ற பேரில் உபத்திரவம்” என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை ஒன்று எல்லாரும் படிக்க உகந்தது.

வெகுசன இயக்கங்கள் செயற்பட வேண்டிய இடைவெளியை என்.ஜீ.ஓக்கள் எப்படித் தங்களுடையதாக்க முடிகிறது என்பது நம் கவனத்துக்குரியது. சிவில் சமூகம் என்ற பேர் என்.ஜீ.ஓக்கள் அணிந்து கொள்ளுகிற ஒரு முகமூடி என்பதை நாம் கவனிக்க வேண்டும். அது உண்மையான சிவில் சமூகத்திற்கு அரசியல் செயற்பாட்டை மறுக்கும் நோக்குடன் பாவிக்கப்படுகிறது.

எல்லா என்.ஜி.ஓக்களும் ஒரே வகையானவையல்ல. சிலவற்றின் மோசடிகள் அப்பட்டமானவை. சில மிகவும் தந்திரமானவை. என்றாலும் எல்லா என்.ஜீ.ஓக்களும் பொருளாதார வசதியுள்ள நாடுகளில் இருந்து நிதியைப் பெறுகின்றன. அவற்றிற் பெரும்பாலானவற்றின் தாய் நிறு வனங்களும் நிதி வழங்கும் அமைப்புக்களும் நேரடியானதும் மறைமுக மானதுமான அந்நிய அரச கட்டுப்பாட்டுக்கும் நெருக்கு வாரங்கட்கும் உட்பட்டவை. பல அமைப்புக்களின் பின்னால் சி.ஐ.ஏ. போன்ற அந் நிய அரசாங்க உளவு-குழிபறிப்பு அமைப்புக்களின் முகவர்கள் செயற் படுகின்றனர். பொதுமக்களிடமிருந்து நிதி பெறுகிற என்.ஜீ.ஓக்களும் தமது அரசாங்கங்களது கட்டுப்பாடுக்கட்கும் அயல் விவகாரக் கொள்கைகட்கும் முரணாக எதையும் செய்ய முடியாது.

என்.ஜி.ஓக்களின் செயற்பாட்டை இயலுமாக்குவதற்கு, முதலிற் பின்தங்கிய பொருளாதார நிலையில் உள்ள நாட்டில் சமூக நலன் பணிகளில் அரசாங்கத்தின் பங்கு குறைக்கப்பட்டு முடியுமானால் இல்லாமலாக்கப்படுகிறது. பல நாடுகளில் பொருளாதாரச் சீர்குலை வுக்குக் காரணம் உலகின் ஏகாதிபத்தியச் சந்தையில் விலைகளையும் சந்தை நிலவரங்களையும் வலிய முதலாளிய நாடுகள் தீர்மானிப்ப தாகும். அயற் சந்தையில் தமது ஏற்றுமதிகளின் விலை விழும்போது விலைச்சரிவை ஈடுகட்ட மேலும் உற்பத்தி செய்து அயற்சந்தை மீது தங்கியிருக்கும் படி நாடுகள் கட்டாயப்படுத்தப் படுகின்றன. அப்படியும், ஏற்றுமதி வருமானத்தை விட இறக்குமதிச் செவுகள் கூடுகின்றன. நாட்

www.padippakam.com

டின் உற்பத்திப் பெருக்கத்திற்கு மூலதனம் தேவைப்படுகிறது. எனவே நாடுகள் கடனாளிகளாகின்றன. கடன் வழங்கும் நாடுகளும் அவற்றை விட முக்கியமாக அந் நாடுகளின் முகவர்களுமான உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவை கடனை மீட்க இயலாது தடுமாறும் நாடுகளின் வட்டியைச் செலுத்த மேலும் கடன் வழங்கிக் கடன் சுமையை ஏற்றுகின்றன. அதே வேளை, அவ்வாறு கடன் வழங்குவதற்கு முன் நிபந்தனையாகப் பலவேறு "சீர்திருத்தங்கள்" முன்வைக்கப்படுகின்றன. தனியார் மயமாக்கல் கல்வி, உடல் நலம், சமூக நலன் போன்ற துறைகளில் அரசாங்கச் செலவைக் குறைத்தல் என்பன இவற்றுள் முக்கியமானவை.

அரசாங்கங்கள் பொருளாதார நெருக்கடிக்கும் உள்ளூர் அரசியல் நெருக்குவாரங்கட்கும் இடையே நெரிபட்டு முடிவில் வேறு வழியின்றிச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துகின்றன. அவற்றை நடைமுறைப் படுத்துமுகமாக இடதுசாரி இயக்கங்களை ஓரங்கட்டுகிற விதமாகப் பேரினவாத அரசியல் போன்றவையும் மதவெறியும் கிளறிவிடப்படு கின்றன. தொழிற்சங்கங்கள் போன்ற அமைப்புக்களின் வலிமையைப் பறிக்கும் விதமாகத் தொழிலாளர் உரிமைகட்கு ஆப்புவைக்கிற காரி யங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டங்களை மாற்றியும் தொழிற் சங்க உரிமைகளற்ற அயல் மூலதனக் கம்பனிகளை நிறுவியும் தொழி லாளி வர்க்கத்தின் ஒற்றுமையைச் சீர் குலைத்தும் தொழிலாளரது போராட்ட வலிமை நசிவுக்கு உட்படுத்தப்படுகிறது.

வறுமை, வேலையின்மை போன்ற பிரச்சனைகளும் வரட்சி, சுனாமி, வெள்ளம், புயல் போன்ற அனர்த்தங்களும் தலை தூக்கும் போது மக்கள் தமது ஒற்றுமையாலும் சரியான சமூக-அரசியல் வழிகாட்டல் களாலும் பிரச்சனைகளைத் தீர்க்க இயலாத விதமாக என்.ஜி.ஓ. நிதி குறுக்கிடுகிறது. அரசாங்கத்திடம் பொருளாதார வசதி போதாத சூழ் நிலையில், அரசாங்கமே என்.ஜி.ஓக்களின் குறுக்கீட்டை ஒரு வசதி யான குறுக்கு வழியாகக் கையாளுகிறது. நேரடியாக அந்நிய அர சாங்க உதவி போலில்லாது, பன்னாட்டுத் தரும நிறுவனம், உள்ளூரத் தரும நிறுவனம் என்ற விதமான ஏற்பாட்டுகளின் கீழ், மக்கள் ஐயப்பட இயலாத விதமாகக் குழிபறிப்பு முன்னெடுக்கப் படுகிறது.

பலவேறு சமூக சேவைகள் முதலாகக் கலை இலக்கியத் துறைகள் வரை என்.ஜி.ஓக்களின் ஊடுருவலுக்கு உட்படுத்தப்படுகின்றன. அவை போக, மக்களைக் கொதிப்புறச் செய்கிற ஏகாதிபத்தியச் சுரண்டல் தொடர்பான பிரச்சனைகளிலும் என்.ஜி.ஓக்களின் சமூக அமைப்புக்கள் நுழைந்து கொள்கின்றன. அதன் மூலம் எந்த ஏகாதிபத்தியத்திற்கு எதி ராக மக்கள் போராட வேண்டுமோ அந்த ஏகாதிபத்தியத்தின் கருவிக



படிப்பகம்

ளான என்.ஜி.ஓக்கள் மூலம் அந்த எதிர்ப்பு வழிநடத்தப் படுகிறது. இலங்கையிற் போன்று பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளது தவறுகளால் இடதுசாரி இயக்கம் வலுவிழந்து பேரினவாத அரசியலால் இடது சாரிகளின் எழுச்சிக்கு முட்டுக்கட்டை இடப்பட்டுள்ள நாடுகளிலும் இடதுசாரி இயக்கம் இன்னமும் வளர்ச்சி பெறாத நாடுகளிலும் மக்கள் இடதுசாரிகளின் பக்கம் திரும்பாமல் கவனித்துக் கொள்வதே உள்ளூர் என்.ஜி.ஓ. அமைப்புக்களின் பிரதான பணியாகும். அனுராதபுர மாவட்டத்தில் எப்பாவெலையில் உள்ள பொஸ்பேற் படிவுகளைத் தனியார் கம்பனியிடம் பொறுப்பளிப்பதற்கு எதிரான போராட்டத்தில், என்.ஜி.ஓக்களின் குறுக்கீடு காரணமாக அப் போராட்டம் தனது அரசியல் பரிமாணத்தை, அதாவது ஏகாதிபத்திய விரோதப் பண்பை, இழந்தது. அதனால், அரசாங்கம் அதே திட்டத்தை இரகசியமாக நிறைவேற்றக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும் போது, மக்களின் எதிர்ப்பு பிசுபிசுத்துப் போய்விடும். ஏனெனில், என்.ஜி.ஓக்களின் அக்கறை பிரச்சனையின் ஆணிவேரைத் தாக்குவதல்ல. மாறாக, அரசாங்கத்துடனும் அந்நியக் கம்பனிகளுடனும் சமரசம் செய்கிற “சிவில் சமூகத்” தலைமைகளை உருவாக்கிப் போராட்டப் பண்புடைய வெகுசனத் தலைமைகளை ஓரங்கட்டுவதே என்.ஜி.ஓக்களது நோக்கமாகும்.

“சிவில் சமூகம்” என்கிற அடையாளத்தில் என்.ஜி.ஓக்கள் மக்கள் சார்பாகப் பேசுகிற புதிய பிரமுகர்களை உருவாக்குகிறார்கள். தலைமைத்துவத் திறமைகளை வளர்ப்பது என்ற பேரில் என்.ஜி.ஓக்களின் சித்தாந்தத்தை உள்வாங்கிய புல்லுருவிகளை உருவாக்குகின்றனர். அரசியற் கட்சித் தலைவர்கட்கு மாற்றாக மக்கள் எவ்வகையிலும் தெரிவுசெய்யாத என்.ஜி.ஓ. அலுவலர்களும் முகவர்களும் தங்களைச் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளாக நிலைநாட்ட முயலுகின்றனர். சகட்டுமேனிக்கு அரசியல் சார்பற்ற தொழிற்சங்கங்கள் எனப் படுவனவற்றின் பிரமுகர்களும் அவர்களுடன் சேர்ந்து கொள்வதால், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என்ற மாயையை வலுப்படுத்த முடிகிறது.

நாட்டில் ஒழுங்காகக் கணக்கு வழக்குக் காட்ட வேண்டிய தேவையற்ற அமைப்புக்களான என்.ஜி.ஓக்களின் கையில் தாராளமாக நிதி புரளுவதால், மேலிடத்து அங்கீகாரத்துடனும், சிலசமயம் அது இல்லாமலும், சமூகத்தில் உள்ள சில பிரமுகர்களை விலைக்கு வாங்க என்.ஜி.ஓ. முகவர்கட்கு இயலுமாகிறது.

இலங்கையின் என்.ஜி.ஓ. ஊடுருவலை இயலுமாக்கியது எது? 1977 முதல் யூ. என். பி. ஆட்சி படிப்படியாகச் சனநாயக உரிமைகட்குக் குழிபறித்து இன ஒழிப்புப் போரொன்றைத் தொடங்கி அதைக் காரணங் காட்டி ஒரு அடக்குமுறை ஆட்சியை நிறுவியமையே அதை இயலு

மாக்கியது எனலாம். எதிர்க்கட்சிகள் பலவீனப்பட்டும், சில செயலிழந்தும், செயற்பட்ட சில பலவேறு மிரட்டல்கட்கும் வன்முறைக்கும் உட்பட்டும் இருந்த சூழ்நிலையில், ஊடகத் துறையில் இருந்த இடைவெளியை 'மேஜ்' எனும் ஒரு என்.ஜி.ஓ. தனதாக்கிக் கொண்டது. அதுபோலவே, அரசாங்கத்தின் பண்பாட்டுத்துறைச் செயற்பாடுகள் மிகவும் பாரபட்சமானவையாயும் மாற்று அரசியல் அடையாளமுடையவை நிதிவசதியின்மை உட்பட்ட பலவேறு நெருக்கடிகளால் இயங்குவதில் சிரமங்களை எதிர் நோக்கிய வேளை கலை, இலக்கிய, நாடக மேடைச் செயற்பாடுகளின் புரவலர்களாப் தம்மை அடையாளப் படுத்துவது என்.ஜி.ஓக்கட்கு எளிதாயிற்று. அதுபோலவே, சமூக சேவைகள், சமூகக் கொடுமைகட்கு எதிர்ப்பு என்பனவற்றிலும் என்.ஜி. ஓக்கள் தங்களையே சமூகச் செயற்பாட்டாளர்களாகக் காட்டிக்கொள்ள இயலுமாயிற்று.

மேற்கூறியவாறு பலவேறு முனைகளில் உண்மையான சிவில் சமூகம் தன் அரசியற் குரலை மீட்பதற்குப் போராடத் தொடங்க வேண்டிய வேளையில், சிவில் சமூகத்திற்கு அரசியலை மறுக்கிற விதமாக என்.ஜி.ஓக்களின் 'அரசியலின்மை'யின் அரசியல் அரங்கிற்கு வந்தது.

என்.ஜி.ஓக்களின் எழுச்சிக்கும் திட்டமிட்ட முறையில் அவை தம்மை சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் என்று தம்மை முன்னிறுத்தி வருவதற்கும் வாய்ப்பாகத் திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவான சமூக அவலங்கள் மிகவும் உதவுகின்றன. உலக மயமாதல் உதவுகிறது. ஏகாதிபத்தியம் உலகவங்கி போன்றன வற்றுக்கு எதிரான கருத்துக்களை என்.ஜி.ஓ. முகவர்கள் பம்மாத்தாக இடையிடையே சொன்னாலும். அவற்றை எதிர்த்து மக்கள் போராடு வதையோ. அரசியல் அடிப்படையில் அணிதிரளுவதையோ அவர்கள் எதிர்க்கின்றனர். ஏனெனில், என்.ஜி.ஓக்கள் ஏகாதிபத்திய உலகமய மாதல் திட்டத்தினின்று பிரிக்க இயலாத ஒரு பகுதியினராவர்.

என்.ஜி.ஓக்களை அம்பலப்படுத்துகிறது கடினமல்ல. எனினும் வெகுசன சனநாயக நோக்கில் மக்களின் அடிப்படையிலான வெகுசன நலன் பேணும் அமைப்புக்கள் மீளக் கட்டியெழுப்பப் படாமல் என்.ஜி. ஓக்களை முறியடிப்பது கடினமானது, ஆயினும் இன்று அவசியமானது.

*(நன்றி: புதிய பூமி, ஜுன் 2006)*

*****

# ஊதியம் பெறுகிறவராகப் “பெண் எனும் ஆள்”

### *- க்யேர்ஸ்ற்றி எரிக்ஸன் -*

*(பெண்கள் ஆண்களை விடக் குறைவான ஊதியம் பெறுகின்றனர். முன்னைக் காலங்களில் இது வெளிவெளியாக நடந்தது. இப்போது வெளிவெளியான ஊதியப் பாகுபாடு பெரும்பாலும் மறைந்துவிட்டது. எனினும் ஆண்களின் சம்பளத்துக்கும் பெண்களின் சம்பளத்துக்கும் இடையிலான வேறுபாடு மறையவில்லை.)*

“இத் தொழிற்சாலையில் ஏறத்தாழப் பெண்களே உள்ளனர். அது ஏனென்றால் வேலை சலிப்பூட்டுமாறு ஒரே மாதிரியாக, சோர்வடையச் செய்கிற விதமாயும் இயந்திரங்கள் மிகவும் உழைப்பைக் குறைத்து உற்பத்தித்திறனை உயர்த்துவனவாகவும் அதன் காரணமாக அவற்றுக்கு ஈடுகொடுக்க நம்ப இயலாதளவு துரிதமாகச் செயற்படவேண்டியும் இருப்பதுதான்.”

“எனவே அங்கே கீழே ஆண்களாற் தாக்குப்பிடிக்க இயலாது என்றும் அலுவலகத்தில் முடிவுக்கு வந்தார்கள்.”

“இவ்வளவு கடுமையாக உழைக்க ஒரு ஆண் கூடிய ஊதியங் கேட்பான். அப்படியும், அந்த வேலை அவனைப் பைத்தியமாக்கி விடும்.”

“பெண்கள் கூட விடாமுயற்சி உடையவர்கள். அவர்கள் இயல்பாகத் தொழில்நுட்பத் திறமை உடையவர்களல்ல. எனவே அவர்கட்கு வேலை விதவிதமாக இருக்கத் தேவையில்லை.”

“வருடக் கணக்காக அச்சொட்டாக ஒரே அசைவை அதிவேகமாகச் செய்வதற்குப் பெண்களின் கைகள் மெய்யாகவே அதி அற்புதமானவை.”

மேற்கண்ட பகுதி தொழிற்சாலைப் பெண் தொழிலாளி ஒருவரது வேலைநாள் பற்றி "நீ, ஆள்?" என்ற நூலில் மாரிற் போல்ஸென் எழுதியதிலிருந்து பெறப்பட்டது. "பெண்கட்கான தொழில்கட்கு" எடுத்துக்காட்டான பலவற்றையும் அது கொண்டுள்ளது, குறைந்த ஊதியம், கடுமையான சலிப்பூட்டும் வேலை, ஒரு வேலையைச் செய்வதற்குப் பெண்களுக்குள்ள தகுதிகள். அவர்கள் பெண்பாலினர் என்பதால் அவர்கட்கு "இயல்பாயமைந்த குணாதியங்கள்" எனும் எண்ணம். அதனால் அவை தகுதியல்லாதனவாகின்றன.

"பெண் எனும் ஆள்" ஊதியம் பெறுகிறவராகக் கூறி உழைப்புச் சந்தைக்குள் நுழைகையில் என்ன நடக்கிறது?

ஸிரி யென்ஸென், உழைக்கும் பெண்களின் குறிப்பான நிலைமை பற்றியும் வர்க்கப் போராட்டத்தில் அவர்கள் வகிக்கும் பங்கிற்கு அது என்ன செய்கிறது என்பது பற்றியும் எடுத்துரைத்துள்ளார். பெண் தொழிலாளர் "வேலைக்கும் குடும்பத்துக்குமிடையே நசிபடுகின்றனர்." அவர்களது வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் அவர்கள் தொழிலாளர் மட்டுமல்ல ஒடுக்கப்பட்ட பாலினரைச் சார்ந்தவர்கள் எனும் உண்மையால் அடையாளப்படுத்தப் பெறுகிறது.

மாரிற் போல்ஸென் விவரிக்கும் நிலைக்குப் பெண்கள் பெரும்பாலும் போய்ச் சேர்வது ஏன்? நான் பின்வருவனவற்றை வற்புறுத்துவேன். "பெண் எனும் ஆளின்" (பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள சமூகப் பாத்திரத்தின்) தனித்துவமான பண்புகள், இயன்றளவு அதிக லாபத் தைப் பெறுவதற்கான மூலதனத்தின் தேடலில் குறிப்பான முறைகளில் சுரண்டலுக்குட்படுகின்றன. இது வேண்டுமென்றே திட்டமிட்டமுறையில் (நிகழலாம் எனினும்) நிகழ அவசியமில்லை. அடிப்படையில் "பெண் எனும் ஆளின்" சமூகப் பண்புகள் அவரை ஆண்களினின்றும் வேறு பட்ட முறைகளிற் சுரண்டுவதற்கு இயலுமாக்குகின்றன என்பது பற்றிய பிரச்சனையே இது.

நான் சிறப்பாக மூன்று விடயங்களை இங்கு கவனத்திற் கொள் கிறேன்.

* பெண்ணின் உழைப்புச் சக்தியின் பெறுமதி,
* பெண்ணின் வாழ்க்கைக் கோலமும் ("வேலைக்கும் குடும்பத் துக்கும் இடையிலான தெரிவு" மூலம் தீர்மானிக்கப் படுவது) அது எவ்வாறு சுரண்டப்படக்கூடும் என்பதும்,

* உற்பத்தித் துறையிலுள்ள பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் சிறப்பான ஒழுங்குமுறை ஏற்பாடுகள்.

### பெண்களின் உழைப்புச் சக்தியின் பெறுமதி

பெண்கள் ஆண்களை விடக் குறைவான ஊதியம் பெறுகின்றனர். முன்னைக் காலங்களில் இது வெளிவெளியாக நடந்தது. அதே வேலைக்குப் பெண்கட்கான ஊதியமும் ஆண்கட்கான ஊதியமும் இருந்தன. உதாரணமாகஇ 1914ல் டேல் மனநோயாளர் மனையில் ஒரு ஆண் பணியாளின் தொடக்க ஊதியம் ஆண்டுக்கு 600 நோர்வீஜிய குறோணர். அதே வேலைக்குப் பெண்ணின் ஊதியம் 350 குறோணர். (ஆதாரம்: 1976ல் எரிக்ஸன் எழுதிய நூல்).

வெளிவெளியான ஊதியப் பாகுபாடு பெரும்பாலும் மறைந்துவிட்டது. எனினும் ஆண்களின் சம்பளத்துக்கும் பெண்களின் சம்பளத்துக்கும் இடையிலான வேறுபாடு மறையவில்லை. உழைப்புச் சந்தை பால் அடிப்படையிற் பிரிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் ஆதிக்கத்திலுள்ள துறை களைவிடப் பெண்கள் ஆதிக்கத்திலுள்ள தொழில்களில் ஊதியம் குறைவாக உள்ளது. அநேகமாக, விலக்கின்றி, உலகெங்கும் இவ் வாறே உள்ளது. 1982ல் சர்வதேசத் தொழில் நிறுவனம் 25 நாடுகளில் நடத்திய ஆய்வில் தொழிற்துறையில் பெண்களின் ஒரு மணி நேர ஊதியம் ஏறத்தாழ ஆண்களினதின் முக்காற் பங்கு எனக் காட்டியது. ஆய்விற்குட்பட்ட விருத்திபெறும் நாடுகள் சிலவற்றில் பெண்களின் ஊதிய மட்டம் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளினதை விடக் கொஞ்சம் தாழ்வாக இருந்தது. எனினும் நாட்டுக்குநாடு பெரும் வேறுபாடுகள் உள்ளன. அனைத்திற்கும் பொதுவானது ஏதெனின் எல்லாவிடத்தும் பெண்களின் ஊதியம் ஆண்களின் ஊதியத்தினும் குறைவாக இருந்தமை தான். சர்வதேச தொழில் நிறுவனத்தின்படி இதன் காரணம் ஒரே வேலைக்கு ஆண்களை விடப் பெண்களுக்குக் குறைவான ஊதியம் வழங்கப்படுவதன்றிக் குறைவான ஊதியந் தரும் தொழில்களில் பெண்கள் செறிவாகக் காணப்படுவது தான். (ஆதாரம்: 1986ல் ரூத் லேகர் ஸெவாட் எழுதிய நூல்).

குறைவான ஊதியந் தருந் தொழில்களிற் பெண்கள் செறிவாகக் காணப்படுவது ஏன்? தொழிற் சந்தை தன்னளவிற் பால் வேறுபாட்டைக் கணிப்பிற் கொள்வதில்லை என்றே பெரும்பாலான விளக்கங்களின் திட்டமுறைகள் ஊகிப்பதாக ஜோன் ஹம்ப்றி 1984ல் எழுதிய நூலிற் சுட்டிக்காட்டுகிறார். தொழிற் சந்தை தொடக்கநிலையில் "பால் நடுநிலையானது". எவ்வாறாயினுந், தொழிற் சந்தைக்கு வெளியே

www.padippakam.com

உள்ள நிலைமைகள் காரணமாகத், தகுதி பெறாதோருக்கான அல்லது முன்னேறும் வாய்ப்பேயற்ற, தகுதிபெற இடமளியாத வேலைகள் போன்றனவற்றிற் போய்ச் சேருகின்றனர். குடும்பத்துக்கே முதற் பொறுப்பைக் கொண்டிருப்பதுடன் இணைத்துக்கொள்ளக்கூடியன வாகப் பளுவற்ற தொழில்களையே "தெரிவு செய்கின்றனர்". அவர் கட்குக் கல்வியும் இல்லை. உயரும் ஆவலும் இல்லை. இவை யாவும் இணைந்து குறைந்த ஊதியத் தொழில்கட்குப் பெண்களை நெருக்குகின்றன. பெண்களின் ஊதியத்திற்கும் ஆண்களின் ஊதியத் திற்கும் இடையிலான வேறுபாடு, தொழிற் சந்தையிற் பெண்ணின் வாய்ப்புக்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் புறக் காரணிகளின் விளைவானதாகும்.

இவை யாவும் அனேகமாகப் பெருமளவும் உண்மையாயிருக்கலாம். ஆயினும் இது முழுமையானதல்ல. அனேகமாக, இது முழுமையின் அதிமுக்கியமான பகுதியுமல்ல. ஹம்ப்றி 1980ல் எழுதிய நூலிற் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்:

"சந்தை" ஆணையும் பெண்ணையும் பால் வேறுபாடு கடந்து மதிப்பிடுவதில்லை. பாலும் ஆற்றலும் தொடர்பான ஆய்வுகளில் இது வற்புறுத்தப்பட்டுள்ளது. தொழிற்சந்தைகள், பெண்களைத் திறமைத் தொழில்களிலிருந்து விலக்கிவைக்க மட்டுமன்றிப் பெண்கள் அத் தொழில்களைச் செய்யும்போது அவற்றைத் தரந்தாழ்த்தும்படியும் செயற்படுகின்றன.

இதன் பொருள் ஏதெனின் பெண்ணின் உழைப்பினதும் ஆணின் உழைப்பினதும் பெறுமதியிலேயே வேறுபாடு உண்டு என்பதாகும்.

*(க்யேர்ஸ்ற்றி எரிக்ஸன் நோர்வே தொழிலாளர் கடசியின் தலைமை ஊறுப்பினராவார். ஆவர் அக்கட்சியின் தலைவராகவும் சில காலம் பணியாற்றியுமுள்ளார்.)*

*(நன்றி: புதிய பூமி, மாச் 2007)*

*****



படிப்பகம்

www.padippakam.com

# பேராசிரியர் கைலாசபதியைத் தனிமைப்படுத்திப் பின் நவீனத்துவப் பார்வைக்குட் தள்ளிவிடும் முயற்சி

*- ஜெ.சற்குருநாதன் -*

தனியே இலக்கியவாதியாகவும் விமர்சகராகவும் பல்கலைக்கழகப் புலமைசார் தொழிற்பாட்டாளராகவும் மட்டுமன்றி இடதுசாரி இயக்கங்களுடன் தொடர்புகளைப் பேணி அப் பிண்ணணியில் நின்று செயற்பட்டவராகவும் பேராசிரியர் கைலாசபதி தொழிற்பட்டதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. கெனமன்-விக்ரமசிங்ஹ தலைமையிலான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் சார்பு நிலைப்பாட்டையும் பின்னர் பெரும்பான்மை இனச் சார்பான நிலைப்பாட்டையும் எடுத்த போது, இலங்கையின் ஸ்தூல நிலைமைகட்கு ஏற்ப அவர் எடுத்த நிலைப்பாடு சரியாக இருந்தது. அதன் பயனாக வடக்கில் தீண்டாமை ஒழிப்பு வெகுசனப் போராட்ட நடவடிக்கைகளின் பிண்ணணியிற் காத்திரமான பணிகளை ஆற்றிய பேராசிரியர் கைலாசபதி மறைந்து முப்பது ஆண்டுகள் கடந்தும் அவரைப் பற்றிய விமர்சனங்கள் குறைந்தபாடில்லை.

அவர் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர் அல்ல. அவரைப் பற்றிய ஆரோக்கியமான விமர்சனங்கள் அவசியமானவை. பாடசாலை தொடங்கிப் பல்கலைக் கழகம் வரை மாணவராகவும், தினகரன் மூலம் பத்திரிகைத் துறையிலும், பல்கலைக்கழக வளாகத்திலும், உள்ளேயும், வெளியேயும் அவர் ஆற்றிய பணிகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. மனித வாழ்நிலையின் சூழ்நிலையே மனிதனது ஆளுமையிற் பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது இயங்கியல்



படிப்பகம்

www.padippakam.com

விதியாகும். "உலகைப் பலர் வியாக்கியானஞ் செய்துள்ளனர். ஆனால், எமது பணி அதனை மாற்றியமைப்பதாகும்" என்ற பாட்டாளி வர்க்க அடிப்படையிலான விஞ்ஞானரீதியான பொருள்முதல்வாதத்தைக் கையில் எடுத்துக்கொண்ட பேராசிரியர் கைலாசபதி, பாட்டாளிவர்க்கஞ் சார்ந்த நிலைப்பாட்டில் மானுட விடுதலைக்கான இலக்கியக் குரலாக உறுதியாக நின்றார். நடைமுறையிலும் அவர் அவ்வழி நின்றவராவார்.

எழுபதுகளில் ஈழத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை முக்கிய கட்டத்தைத் தாண்டிய வேளையில், தோழர் சண்முகதாசனின் நிலைப் பாட்டில் தனக்கு இருந்த சந்தேகங்களை முன்வைத்து, அன்றைய பிரச்சினையை அச் சூழ்நிலைக்குரிய வர்க்க அடிப்படையில் நோக்கி யதுடன், தேசியவாதம் பற்றிப் பாட்டாளி வர்க்கப் புரிதலுடனும் செயற் பட்டார்.

தோழர் சண்முகதாசனின் நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்டு, இலங்கைப் புரட்சியின் முதற் கட்டமாகப் புதிய ஜனநாயகப் புரட்சிக் கான போராட்டத்தையும் அதன் பின் பாட்டாளி வர்க்கப் புரட்சியை நோக்கிய நகர்வினையும் மேற்கொள்ளும் நோக்கில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற கட்சி தொடங்கப்பட்டது. அக் கட்சி தற்பொழுது புதிய-ஜனநாயக மாக்ஸிய-லெனினியக் கட்சி என்ற பெய ருடன் ஒடுக்கப்பட்ட பாட்டாளி வர்க்க விடுதலையை நோக்கி இயங்கி வரும் இலங்கையின் முதன்மையான கம்யூனிஸ்ட் அமைப் பாகும்.

அக் கட்சியின் தொடக்கக்காலந் தொட்டுத் தனது மறைவு வரை அக் கட்சியின் செயற்பாடுகளின் பிண்ணணியிற் பேராசிரியர் கைலாச பதி இருந்து செயற்பட்டதற்குக் கட்சியின் செம்பதாகை உட்பட்ட ஏடு களில் தனது சொந்தப் பெயரிலும் புனைபெயரிலும் எழுதிய கட்டுரைகள் சான்று பகிர்கின்றன. தனது பல்கலைக்கழகப் பணிகளி னதும் எழுத்தாக்க முயற்சிகளினதும் மத்தியிலும், அவர் இலங்கையின் மாக்ஸிய-லெனினிய இயக்கஞ் சார்ந்த பணிகளில் விடாது ஈடுபட்டு வந்தார்.

இப் பிண்ணணியிற் கட்சியின் இலட்சியச் செயற்பாடுகளை முன்னெடுக்க ஒரு தனியான அமைப்புத் தேவைப்பட்டபோது தேசிய கலை இலக்கிய பேரவையை உருவாக்குவதற்கான ஆலோசனை களையும் வழிகாட்டலையும் வழங்கியர் பேராசிரியர் கைலாசபதி. தேசிய கலை இலக்கியப் பேரவையின் உத்தியோகபூர்வ சஞ்சிகை யாகத் தாயகம் 1974 முதலாக வெளிவந்தது. தாயகத்தின் முதலாவது இதழில் 'இங்கிருந்து எங்கே' என்ற கட்டுரையில் தேசிய கலை



படிப்பகம்

இலக்கிய பேரவையின் செயற்பாடுகள் பற்றிய விஞ்ஞான பூர்வமான நிலைப்பாட்டை முன்வைத்தார்.

மானுட விடுதலைக்கான இலக்கியப் பணிகளை ஆற்றியவர்கள் பலர் இடதுசாரி அமைப்புகளுக்குப் பின்னால் இருந்துள்ளார்கள். மாக்ஸிம் கோர்க்கி, லூ ஷுன், ஜூலியஸ் ஃபூசிக், பப்லோ நெருடா போன்ற எத்தனையோ பேர் கம்யூனிஸ இயக்கப் பிண்ணணியிலிருந்து செயற்பட்டவர்கள். ஒரு புரட்சிகர கட்சிக்குத் தேரும் சில்லுமாக இலக்கியம் அமைய வேண்டும் என்ற நிலைப்பாட்டால் சமூக மாற்றத்திற்கான இலக்கியப் படைப்பாகஅமைந்துள்ளது என வரலாறு பதிவு செய்துள்ளது. எழுத்தாளர்கள் கட்சி உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற நியதியின்றி, வர்த்தமான ஸ்தூல நிலைமைகட்கு ஏற்றவாறு அமைய வேண்டியதன் அவசியத்தைக், 'கட்சியும் இலக்கியமும்' என்ற நூலிலும் மாமேதை லெனின் விளக்கியுள்ளார். அதனைப் போலவே, கட்சியின் இலக்கியக் கொள்கை பற்றிக் "கலையும் இலக்கியமும் மக்களுக்கே" என்ற கட்டுரைத் தொகுதியில் மாமேதை மாஓ சேதுங் விவரித்துள்ளார். அவ்வாறே ரோஸா லுக்ஸம்பர்க், ஜோஜ் தொம்சன் போன்றோர் இலக்கியம் பற்றித் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

ஆழ்ந்த வாசிப்புக் கொண்ட கைலாசபதி மேற்குறித்த மானுட விடுதலை நாடும் இலக்கியவாதிகளின் அனுபவங்களுக்கு உடன்பாடாகவே தனது இலக்கியப் பணிகளை மேற்கொண்டார். "நண்பர்கள் யார், எதிரிகள் யார்" என்பதை அடையாளப்படுத்தி "நூறு பூக்கள் மலரட்டும், நூறு கருத்துக்கள் முட்டி மோதட்டும்" என்ற நிலைப்பாட்டுக்கு அமையத் தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாடுகள் அமைய உகந்த வழிகளை அவர் முன்வைத்தார். அவர் ஆரம்பித்து வைத்து அவருடைய வழிகாட்டலில் விருத்தி கண்ட தேசிய கலை இலக்கிய பேரவை, இன்று வியாபித்து, நாடு முழுவதும் தனித்துவத்தினை ஆழப் படுத்தித் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டதுடன், நாடகங்கள், பட்டிமன்றங்கள் என்பவற்றை மக்கள் மத்தியில் செயற்படுத்தி வருகின்றது. பல இடர்ப்பாடுகளின் நடுவிலும் தாயகம் இன்றளவும் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில், தேசிய கலை இலக்கியப் பேரவைக்கும் பேராசிரியர் கைலாசபதிக்கும் இருந்துவந்த உறவுகள் வெறும் ஆலோசனை மட்டத்திலேயே இருந்தன என்று கூறித் தேசிய கலை இலக்கியப் பேரவைக்கும் அவருக்கும் இருந்துவந்த உறவை மட்டுமன்றி அதன்மூலம் புதிய-ஜனநாயக மாக்ஸிய-லெனினியக் கட்சியுடனான அவரது அரசி

www.padippakam.com

யல் நெருக்கத்தையும் மூடிமறைக்க 'முச்சந்தி இலக்கிய வட்டம்' என்ற பேரிற் செயற்படுகிற சில்லரைத்தனமான ஒருவர் தொடர்ந்தும் முயன்று வருகிறார். அதன் போக்கில், பேராசிரியர் கைலாசபதியின் அரசியல் அடையாளத்தையும் பங்களிப்புக்களையும் மழுப்பிமறைக்கும் தேவை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

பேராசிரியர் கைலாசபதி இடதுசாரி இயக்கத்திற்கு அப்பாற்பட்டவர் என எவரும் காட்ட முயல்வது எந்த அளவுக்கு பொருத்தமானது எனப் பேச வேண்டியதில்லை. அதற்கான நோக்கங்களை அறிவது மட்டுமே முக்கியமானது. இது தனிப்பட்ட வன்மமா அல்லது இடதுசாரி வேடம் பூண்ட ஒரு இடதுசாரி விரோதக் குழுவின் திட்டமிட்ட செயலா என்பது விசாரணைக்குரியது. இச் செயலுக்கு உடந்தையாக இருக்கிற முன் னாள் இடதுசாரி வேடதாரிகளை அடையாளங் கண்டு அம்பலப்படுத்து வதும் முக்கியமானது.

தனிமனித அடிப்படையில் தேசிய கலை இலக்கியப் பேரவைக்கு ஆலோசனை வழங்கிய முக்கியமான இடதுசாரி இலக்கியவாதிகள் பலர் உள்ளனர். ஆனால் தேசிய கலை இலக்கியப் பேரவை ஒவ் வொருவருடனும் தனக்கிருந்துவந்த உறவின் தன்மை சார்ந்தே தன்னை அவர்களுடன் அடையாளப்படுத்தி வந்துள்ளது.

பேராசிரியர் கைலாசபதிக்கும் தேசிய கலை இலக்கியப் பேரவை க்கும் இருந்துவந்த உறவு அவர் அந்த இலக்கிய இயக்கத்திற்கு ஆலோசனை வழங்கிய பணிகளுக்கு மட்டுப்பட்டது என்று அவரை அடையாளப்படுத்தி முடக்குவது பேராசிரியர் கைலாசபதி மீதும் தேசிய கலை இலக்கியப் பேரவை மீதும் பகைமையுடைய இடதுசாரி எதிர்ப் பாளர்களும் செய்யக் கூசுகிற ஒரு செயல்.

தேசிய கலை இலக்கியப் பேரவைக்கு அவரது பங்களிப்பை வெறும் ஆலோசனை என்று குறுக்குவதோடு நில்லாது, பிரமுகர்கட்குப் பின்னால் அலைந்தும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடும் பிழைப்பு நடத்துகிற அந்தனி ஜீவா என்பவரின் 'இலக்கிய' அமைப்புக் கும் அவர் ஆலோசனை வழங்கினார் என்று சொல்லுவது இரண்டு அமைப்புக்களுடனும் பேராசிரியர் கைலாசபதியின் உறவைச் சமன் படுத்தும் ஒரு முயற்சியே. அது ஒருபுறமிருக்க, அந்தனி ஜீவாவின் 'இலக்கிய' அமைப்புக்குப் பேராசிரியர் கைலாசபதி எப்போது எவ்வா றான ஆலோசனை வழங்கினாரென 'முச்சந்தி இலக்கிய வட்டம்' என்ற பேரில் நடமாடுகிறவரால் இதுவரை சொல்லவியலவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றை மட்டும் உறுதியாகக் கூறலாம்: மலையகத்தைக் கூறு போட்டுக் கொண்டு காலத்துக்கு காலம் அரசாங்கத்திற்குக் காவடி தூக்கும் செயல்கட்கும் செயற்பாட்டாளர்களுக்கும் பேராசிரியர் கைலாசபதிக்கும் நல்ல உறவு இருந்திருக்க இயலாது. அதேயளவு நிச்சமாகப், பேரினவாத முதலாளிய அரசாங்கம் நடத்தும் ஆடம்பர விழாக்களிற் பங்குகொண்டு பொன்னாடை, பொற்கிளி, பரிசு, கௌரவிப்பு என்று அலைவோரை இலக்கியச் செயற்பாட்டாளர்கள் என்று காட்டுகிற ஒரு கும்பலுக்குப் பேராசிரியர் கைலாசபதி மீது நல்லெண்ணம் இருக்க இயலாது.

தேசிய கலை இலக்கிய பேரவையினர் சாகித்திய மண்டலப் பரிசு, பொன்னாடைக் கௌரவிப்பு போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை என்பதை வரலாறு காட்டி நிற்கிறது. அந்த நிலைப்பாட்டில் பேராசிரியர் கைலாசபதியின் வழிகாட்டலின் தடம் ஆழப் பதியப்பட்டுள்ளது என்பது முக்கியமான ஒரு உண்மையாகும். அவரைத் தேசிய கலை இலக்கிய பேரவைக்கு மட்டுமே பிதாமகராக கொள்ள அவசியமில்லை. பிற்போக்கிற்கெதிரான ஐக்கிய இலக்கிய முன்னனியொன்றை நாடுகிற ஜனநாயக முற்போக்கு சக்திகட்கு அவர் வழிகாட்டியாக இருந்தார் என்பது மறுக்க இயலாத உண்மையாகும்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்பாடுகளைத் தேசிய கலை இலக்கிய பேரவையின் செயற்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பேசுகிற நோக்கமும் மேற்கூறியதைப் போன்றதே.

1950களில் உலக சமூகமயமாதல் நடவடிக்கைகளிற் பல மாற்றங்கள் எழுந்ததன் பயனான சுதேசிய நாட்டம், விதேசிய எதிர்ப்பு நிலைப்பாடு என்பன இலங்கைக்கு வந்ததன் விளைவாக, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோன்றியது. அக் காலகட்டத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பாத்திரம் தனித்துவமானது என்பதை மறுக்க முடியாது. ஆனால் இடதுசாரி இயக்க நிலைப்பாட்டில் நின்று அது இயங்காததன் விளைவாக, 1960களிலிருந்து அது பலவீனப்பட்டு விட்டது. பின்னைக்காலங்களில் அதற்குள் முரண்பாடுகள் விரிவடைந்து தனிமனிதவாதம் மேலோங்கியது. இன்று ஐந்தாறு பேர் கூடித் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியோடு இயங்கிவருவது வரலாற்று உண்மை. தேசிய கலை இலக்கியப் பேரவை 1970களில் தன் செயற்பாடுகளைத் தொடங்கி, "புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு" என்ற இலக்குடன் இன்றுவரை தொடர்ந்தும் சுயபலத்தில் இயங்கி வருகின்றமை கவனிக்கத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என அன்று அறியப்பட்ட புதிய-ஜனநாயக மாக்ஸிய-லெனினியக் கட்சியினின்றும் தேசிய கலை இலக்கியப் பேரவையினின்றும் பேராசிரியர் கைலாசபதியை வலிந்து பிரித்துக் காட்டுவதில் ஒருசிலருக்குள்ள அக்கறைக்குக் காரணம் அவர்களது பிழைப்புவாதப் பின்நவீனத்துவ அரசியலே. அவர்களால் உழைக்கும் வர்க்க நிலைப்பாட்டிலிருந்து சிந்தித்துச் செயற்படவும் ஒரு சமூகப் பயனுள்ள இயக்கத்தை கட்டி வளர்க்க முடியாதுள்ளதால், பேராசிரியர் கைலாசபதியையும் தங்களைப் போல ஒரு பின்நவீனத் துவவாதியாகக் காட்டும் பாமரத்தனமான முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்வோர் தமது அரசியல் வங்கலோட்டுத்தனத்தினாலும் சிந்தனை வரட்சியாலும் காழ்ப்புடன் இலக்கு வைக்கும் புதிய-ஜனநாயக மாக்ஸிய-லெனினியக் கட்சிக்கோ தேசிய கலை இலக்கியப் பேரவைக்கோ கெடுதல் செய்வதை விட முக்கியமாகப், பேராசிரியர் கைலாசபதியின் சமூக அரசியல் அடையாளங்களைத் திரித்து அவரை அரசியல் நீக்கஞ் செய்வதற்கே பெருமளவும் உதவுகின்றனர். இவ்வாறான முயற்சிகள் தோழர் மு. கார்த்திகேசன் கவிஞர் முருகையன் போன்றோர் விடயத்திலும் முன்னர் முயலப்பட்டதும் இன்னமுந் தொடருகிறதுமான விஷமத்தனத்தின் இன்னொரு பக்கமே.

இவற்றை அம்பலப்படுத்துவதன் தேவை ஏதென்றால் இவ்வாறான விஷமமும் விஷமிகளும் இருந்து வருவதையும் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்துவதாகும். அதை விட, இவ்வாறான விஷமங்கட்குச் சில என்.ஜி.ஓக்களின் ஆதரவுப் பின்புலம் இருப்பதையும் நாம் கவனத்தில் எடுப்பது முக்கியமானது.

*****



படிப்பகம்

www.padippakam.com

# உறங்கும் மனிதம்

**சி. கிருஷ்ணபிரியன்**

இருளடைந்த
பகற்பொழுதொன்றில்
அழுதுகொண்டிருக்கிறாள்
பெண்ணொருத்தி

கண்ணீரில் நனைந்துவிட்ட
சட்டையைச் சப்பியபடி
அவள் குழந்தை

வெறிச்சோடிப்போன வீதியில்
வேகமாய்ப் போய்வரும்
மனிதர்கள்
ஒப்பாரில் கண்காட்சியை
ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு
நழுவிக் கடக்கிறார்கள்

ஒப்பாரியின்
முழுநீள விவரணத்தைத்
தொகுக்கிறது
செய்தி ஊடகம்

வெள்ளை ஊர்தியின்
அடையாளந் தெரியாக்
காவலர்கள்
கடத்திச்சென்ற கணவனை



படிப்பகம்

www.padippakam.com

மீட்டுத்தருமாறு
புலம்புகிறாள்.

குழந்தை
சட்டையைச் சப்பியபடி
மருள மருள விழிக்கிறது
மனிதர்கள்
போய் வந்து
கொண்டிருக்கிறார்கள்

கண்ணீர் வற்றிப்போன
கண்களுடன்
வீதியில் அவள்

தனக்குச்
சம்பந்தமில்லாதது போல்
கந்தல் போர்வையைத்
தலை வரை
போர்த்திக்கொண்டு
ஓரமாய்
வீதியில்
உறங்குகிறது
மனிதம்

*(நன்றி: கிருஷ்ணபிரியனின் **வேரின் பிரசவங்கள்,** கவிதைத் தொகுதி புதிய மலையகம் வெளியீடு, 2011)*

*****



படிப்பகம்

# தேயிலைத் தோட்டத் தளிர்களே

செ. செல்வகுமார்

தேயிலைத் தோட்டத் தளிர்களே! தளிர்களே! – வாழ்க்கைச்
சிறகு முறிந்த குயில்களே! குயில்களே!
உழைத்து ஓய்ந்த கரங்களே! கரங்களே! – தம்
உரிமை மறந்த ஜனங்களே! ஜனங்களே!

லயத்தும் சிறையில அடிமைகளா வாழுகின்ற நெலம
முகவரியே நமக்கு இல்ல என்னாங்க இது கொடும
ஓழைச்சு ஒழைச்சு நாட்ட நிமித்தி
ஒடிஞ்சி போனோ நாங்க

காலங்காலமாக தொடரும் கொடும
கணக்கு தீர்ப்பது கடம

தேயிலைத் தோட்டத் தளிர்களே....

காலமெலாம் கஷ்டப்பட்டு கண்டதென்ன – நாம
கால்வயிறும் கண்ணீரு வாங்கி வந்த பெரும
வேலை சுமையும் கூலிக்குறைவும் வாழ்வு என்று ஆச்சு

ஏய்க்கும் ஆளை தெரிஞ்சுகிட்டா
ஏழ்மை இங்கு நீங்கும்

தேயிலைத் தோட்டத் தளிர்களே....

ஓட்டுக்கேட்டு ஓட்டுவாங்கி ஓடிப்போன நீங்க
உருப்படியா இதுவரைக்கும் என்னாத்த கிழிச்சீங்க
வாழ்க்க மலர மலையகத்தை மாற்றியமைப்போம் வாங்க
மக்களெல்லோரும் ஒன்றுபட்டா நல்ல
மாற்றம் வந்து சேரும்

தேயிலைத் தோட்டத் தளிர்களே....

*****

# வெள்ளரியும் கத்தியும்

*பில்கிஸ் ZாFிருல் ஹஸன்*

கத்தி வெள்ளரி மீது விழுந்ததோ
வெள்ளரி கத்தி மீது விழுந்ததோ
அதனாற் கத்திக்குச் சேதமில்ல
வெட்டுண்டு போவது எப்போதுமே வெள்ளரி தான்
கத்தி, எப்போதும் இருப்பது போலக்
கூராய், மினுமினுப்பாய் இருக்கும் —
இன்னொரு வெள்ளரியை வெட்ட ஆயத்தமாக

அவளுடைய வீட்டைத் தாண்டும் போது
ஒரு காவாலி சீழ்க்கையடித்தான்
அதன் பின் சீதா தன் வீட்டுப் படி தாண்ட மாட்டாள் —
அவள் வெளியே போகத் தடை விதிக்கப்பட்டுள்ளது
அயலவன் ஒருவன் நோட்டமிடத் தொடங்கினான் —
எனது சகோதரன் தனது மனைவியை
அவளுடைய பெற்றோரிடம் அனுப்பி விட்டான்
வன்கலவிக்குட்பட்ட பின்பு சாவித்திரி இறந்தாள் — தற்கொலை.
ஓம்! கத்தி வெள்ளரி மீது விழுந்ததோ
வெள்ளரி கத்தி மீது விழுந்ததோ
வெள்ளரி வெட்டுண்ண வேண்டும்
ஆயினும்
ஒரு பெண்ணுக்கும் வெள்ளரிக்கும் வேறுபாடு இல்லையா?

1938 செப்ற்றெம்பர் 1ம் திகதி பிறந்த *பில்கிஸ் ZாFிருல் ஹஸன்* ***(Bilquis Zafirul Hasan)*** ஒரு உருதுக் கவிஞரும் கதாசிரியருமாவார். ஆங்கில மொழி பெயர்ப்பு: அர்ஜுமாந்த் அரா ***(Arjumand Ara).*** தமிழில் சி. சிவசேகரம்.

நன்றி: http://radicalnotes.com/content/view/139/36/

*புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.*

***K. Senthivel** அல்லது **V. Mahendran, Account Number 1570018335 Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***